KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 25 ஏப்ரல் 2025 இதழ்:- 17

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

# கோத்தபாய எந்நேரமும் கைது செய்யப்படலாம்? தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு!



தமிழ் இனப் படுகொலையாளியும் ஸ்ரீலங்கா முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்ற தென்னிலங்கை தகவல் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை தோற்றுவித்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி மிக விரைவில் கைது செய்யப்படுவார் என்றும், அவர் முக்கிய அரசியல் பிரமுகர் என்றும் அரசு (3ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## பிள்ளையான் செய்த தவறு ஒன்று மட்டுமல்ல! தோண்டத் தோண்ட நிறையவே வருகின்றன

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## கருணாகரன் எழுதுகிறார் - பிள்ளையான் கைது:- ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கான எச்சரிக்கையா?



புலியைப் பிடிப்பதற்குப் பதிலாக எலியையா பிடித்து வீரம் பேசுகிறது NPP என்று கேட்கிறார்கள் பலரும். அவர்களுடைய கேள்வி நியாயமானதே! ஏனென்றால், தங்களிடம் 400 கோவைகள் உண்டு. நாட்டுக்குத் துரோகமிழைத்தவர்களும் ஊழல்வாதிகளும் குற்றவாளிகளும் தப்பவே முடியாது. அத்தனை குற்றச் சாட்டுகளுக்கும் தவறுகளுக்கும் ஆதாரம் (9ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு

எதிர்பாருங்கள்! ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!



## சிங்கள தேசத்தின் மூலஸ்தானத்தில் மோடி நுழைய இந்தியா கொடுத்த விலை ஈழத்தமிழர்களும் 13வது திருத்தமும்

## NPPக்கு எதிரான தமிழ்த்தேசியக் கட்சிகளின் வியூகம் என்ன? - நிலாந்தன் எழுதுகிறார்

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated
**Bus: 416-289-3333**




22 Years Real Estate Experience

**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**


### Warden/Finch


**Scarborough** $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school


### Kennedy / Hwy 401

**Scarborough** $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


### Markham / Sheppard Ave

**Scarborough** $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse

### McCowan / Ellesmere

**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


### Mccowan & Hwy 401

**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


### Kennedy / 401

**Scarborough** $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining


### Simcoe St / 401

**Oshawa** $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft


### Grandview Dr. / Bloor

**Oshawa** $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

### 9TH LINE / HIGHWAY 7

**Markham** $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

### Dixie/ Glenanna

**Pickering** $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E

**Ajax** $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse


### Markham & Ellesmere

**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance


### Morningside/Mcnicol

**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### 401/Morningside

**Scarborough** $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr

**Stouffville** $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park

**Stouffville** $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கோத்தபாய எந்நேரமும் கைது செய்யப்படலாம்? தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு!

தமிழ் இனப் படுகொலையாளியும் ஸ்ரீலங்கா முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எந்நேரமும் கைது செய் யப்படலாம் என்ற தென்னிலங்கை தகவல் அரசியல் வட்டார ங்களில் பரபரப்பை தோற்றுவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி மிக விரைவில் கைது செய்யப்படுவார் என்றும், அவர் முக்கிய அரசியல் பிரமுகர் என்றும் அரசு கூறி வருகின்றது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பிள்ளையான் அவரது சாரதியென கைதுகள் தொடர்கின்றது.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் அந்தப் பிரதான சூத்திரதாரிக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றவே 2019 ஆம் ஆண்டில் ஒரு தரப்பால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரி வித்திருந்தார். எனவே, ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூ த்திதாரி என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட வுள்ள முக்கிய அரசியல் பிரமுகர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவாக இருக்கலாம் என்று தென்னில ங்கையில் பரபரப்பு தொற்றியுள்ளது.

இது இவ்வாறிருக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மேற்கொண்ட குழுவின் தலைவர் என கருதப்படும் சஹ்ரான் ஹாசிமிற்கும் இராணுவ புலனாய்வுப் பிரிவிற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து ஜனாதிபதி விசாரணை களை மேற்கொள்ள வேண்டும் என பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சஹ்ரான் ஹாசிமிற்கும் இராணுவ புலனாய்வு பிரிவிற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும், முக்கிய சாட்சியான ஆசாத் மௌலானா தெரிவித்த விடயங்கள் உட்பட சனல் 4 இன் ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சதித்திட்டத்திற்கு காரணமான துணை இராணுவ குழு கட்டமைப்புகளை செயல் இழக்கச் செய்வதற்காக புதிய சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். ஆட்சியில் உள்ளவர்கள் மக்களை ஆள்வதை விட மக்களிற்கு சேவையாற்றுவதை உறுதி செய்யும் புதிய கலாச்சாரத்தை ஏற்படுத்த வேண்டும்.

# இந்திய விமானங்கள் பறப்பதற்கு தனது வான் எல்லையை மூடியது பாகிஸ்தான்



இந்திய விமானங்களிற்கு தனது வான் எல்லையை மூடியுள்ள பாக்கிஸ்தான் இந்தியாவுடனான அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் இடைநிறுத்தி வைப்ப தாக அறிவித்துள்ளது.

இந்தியாவிற்கு சொந்தமான இந்தியாவிலிருந்து இயங் கும் அனைத்து விமானங்களிற்கும் தனது வான் எல் லையை மூடுவதாக பாக்கிஸ்தான் அறிவித்துள்ளது என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு செல்லும் அல்லது மூன்றாவது நாட்டிலிருந்து பாக்கிஸ்தான் ஊடாக இந்தியாவிற்கு செல்லும் பொருட்கள் உட்பட வர்த்தக நடவடிக்கைகளை இடை நிறுத்துவதாகவும் பாக்கிஸ் தான் அறிவித்துள்ளது.

பாக்கிஸ்தானிற்கு என ஒதுக்கப்பட்ட நீரோட்டத்தை தடை செய்யவோ அல்லது திருப்பி விடவோ மேற்கொள் ளப்படும் எந்த நடவடிக்கையையும் போர் நடவடிக்கை யாக கருதப்போவதாக பாக்கிஸ்தான் எச்சரித்துள்ளது.



## இந்தியப் பிரதமர் கடும் எச்சரிக்கை!

பிரதமர் மோடி 'பயங்கரவாத தாக்குதலுக்கு காரண மானவர்கள் மற்றும் சதிகாரர்கள் கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு தண்டிக்கப்படுவார்கள். ஒவ்வொரு பயங்கர வாதியையும் அவர்களை ஆதரிப்பவர்களையும் இந்தியா அடையாளம் கண்டு கண்காணித்து தண்டிக்கும் என்று நான் முழு உலகிற்கும் கூறுகிறேன். பூமியின் கடைசி வரை அவர்களைத் துரத்துவோம்.

அவர்களுடைய (பயங்கரவாதிகளின்) மீதமுள்ள மண் ணைப் பறிக்கும் நேரம் வந்து விட்டது. கார்கில் முதல் கன்னியாகுமரி வரை முழு நாடும் இந்த பயங்கரவாதத் தாக்குதலால் வருத்தமாகவும் கவலையாகவும் உள்ளது. இந்த சம்பவத்தால் முழு நாடும் கோபமாக உள்ளது. இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் தப்ப விடப்பட மாட்டார்கள். மனிதநேயத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரும் எங்களுடன் உள்ளனர். இந்த நேரத்தில் எங்களுடன் நின்ற பல்வேறு நாடுகளின் மக்களுக்கும் தலைவர்களுக்கும் நான் நன்றி கூறுகிறேன் என தெரிவித் தார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# சீனா மீதான வரி குறைப்பு செய்வதாக டிரம்ப் தெரிவிப்பு!



சீனா மீது விதிக்கப்பட்ட வரி குறைக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். இதனால் விரைவில் அமெரிக்கா — சீனா இடையேயான வர்த்தக போர் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவுக்கு அமெரிக்காவும், அமெரிக்காவுக்கு சீனாவும் வித்துள்ள பதிலடி வரிகள் காரணமாக சர்வதேச அளவில் வர்த்தகம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், 145வீத வரி கொஞ்சம் அதிகம்தான். ஆனால் இந்த அளவுக்கு வரி நீடிக்காது. நிச்சயம் குறைக்கப்படும். ஆனால் அது பூஜ்ஜியமாக மட்டும் இருக்காது. ஒரு காலத்தில் சீனாவுக்கு எந்த வரியும் இல்லாமல் இருந்தது. இதனால் நாம்தான் அதிகமாக பாதிக்கப்பட்டோம். இனி இது போன்ற நிலை இருக்காது. இனி வரும் காலங்களில் நாமும் நன்றாக நடந்து கொள்வோம். அவர்களும் நன்றாக நடந்து கொள்வார்கள். என்ன இருந்தாலும் அவர்கள் நம்முடன் ஒப்பந்தம் செய்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு வர வேண்டும் என கூறியுள்ளார்.

அதேபோல முதலீட்டாளர்கள் சந்திப்பு ஒன்றில் பேசிய அமெரிக்க நிதி செயலாளர் ஸ்காட் பெசென்ட்,

இந்த அளவுக்கான வரி தொடர்வது சாத்தியமில்லை. தற்போது இருக்கும் வர்த்தக அமைப்பு நீடிக்காது என்றும் கூறியுள்ளார்.

டிரம்பும், நிதி செயலாளர் பேச்சுகளை வைத்து பார்க்கும்போது சீனாவுடனான மோதல் விரைவில் முடிவுக்கு வர இருப்பதை போல தெரிகிறது என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

எனினும் டிரம்ப் பேச்சில் உண்மை தன்மை எவ்வளவு இருக்கிறது என்பதை உறுதியாக சொல்ல முடியாது என்றும் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

# இலங்கைப் பொருளாதாரம் பற்றி உலக வங்கி விசேட அறிக்கை!

2024ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மீட்சியை அடைந்துள்ளதாகவும், உலக வங்கியின் கணிக்கப்பட்ட 4.4 சதவீத வளர்ச்சி விகிதத்தை விட 5 சதவீத வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

23 ஏப்ரல் 2025 புதன்கிழமை வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் உலக வங்கி, இந்த வளர்ச்சிக்கு தொழில்துறை, சேவைகளில், குறிப்பாக கட்டுமானம் மற்றும் சுற்றுலா தொடர்பான சேவைகளில் வலுவான செயல்திறன் உந்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியது.

இருப்பினும் உலகளாவிய பின்னடைவுகள், முன்னெப்போதும் இல்லாத வர்த்தகக் கொள்கை நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில், நெருக்கடியின் நீடித்த விளைவுகள் மற்றும் வளர்ச்சிக்கான கட்டமைப்புத் தடைகள் காரணமாக 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் வளர்ச்சி 3.5 சதவீதமாகக் குறையும் என்று உலக வங்கி கணித்துள்ளது.

நிலையான பாதை என்ற தலைப்பில் உலக வங்கியின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் இலங்கை மேம்பாட்டு புதுப்பிப்பு வெளியிடப்பட்டது.

நேர்மறையான வளர்ச்சி மற்றும் நிதி செயல்திறன் இருந்த போதிலும், இலங்கை குறிப்பிடத்தக்க சவால்கள் இன்னும் உள்ளன என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

பொருளாதாரம் மீண்டு வரும் வேளையில், பல இலங்கையர்கள் இன்னும் சிரமப்படுகிறார்கள். வீட்டு வருமானம், வேலைவாய்ப்பு மற்றும் ஒட்டுமொத்த நலன்புரி இன்னும் நெருக்கடிக்கு முந்தைய நிலைகளை விட மிகவும் குறைவாகவே உள்ளன.

மேலும் வறுமை விகிதம் 2024 இல் 24.5 சதவீதமாக ஆபத்தான அளவில் அதிகமாக உள்ளது. தொழிலாளர் சந்தை தொடர்ந்து போராடி வருகிறது. இதனால் மக்கள் வெளிநாடுகளில் வாய்ப்புகளைத் தேடுவதால் குடியேற்றம் அதிகரிக்கிறது.

இது தொடர்பில் கூறியுள்ள மாலத்தீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கி பிரிவு பணிப்பாளர் டேவிட் சிஸ்லன், இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வலுவாக மீண்டு வரும் அதே வேளையில், மக்கள் தொகையில் கணிசமான பகுதியினர் சுமார் மூன்றில் ஒரு பங்கு வறுமையில் உள்ளனர் அல்லது மீண்டும் வறுமையில் விழும் அபாயத்தில் உள்ளனர்.

இந்த மீட்பு அனைவருக்கும், குறிப்பாக கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் செய்வதை உறுதி செய்வதற்காக, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் ஏழைகளுக்கு ஆதரவளிக்கும் கொள்கைகளில் இலங்கை கவனம் செலுத்த முடியும் என்றார்.

அதிகரித்து வரும் நிச்சயமற்ற உலகளாவிய சூழலுக்கு மத்தியில், நடுத்தர கால வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பு, பெரிய பொருளாதார நிலைத்தன்மையைப் பேணுவதையும், முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதையும் சார்ந்துள்ளது என்பதை உலக வங்கியின் அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

2026ஆம் ஆண்டில் இலங்கைக்கு சுமார் 3.1 சதவீத மிதமான வளர்ச்சி இருக்கும் என்று உலக வங்கி கணித்துள்ளது. வர்த்தகம், முதலீடு, போட்டி மற்றும் பெண் தொழிலாளர் பங்கேற்பை மேம்படுத்தும் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதன் மூலம் அதிக வளர்ச்சிப் பாதைக்கு மாறுவது, அனைத்து இலங்கையர்களும் மீட்சியிலிருந்து பயனடைவதை உறுதி செய்வதற்கு அவசியம்.

எதிர்காலத்தைப் பொறுத்தவரை, பெரிய நிதி மற்றும் நிதி நிலைத்தன்மையைப் பராமரிக்கவும், போட்டித்தன்மையை அதிகரிக்கவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் கொள்கை சீர்திருத்தங்களின் தொடர்ச்சியான தேவையை உலக வங்கி வலியுறுத்துகிறது.

தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் வாய்ப்புகளை ஆராய்ந்து, நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கை சவால்களை பகுப்பாய்வு செய்யும், வருடத்திற்கு இரண்டு முறை உலக வங்கி அறிக்கையான தெற்காசிய மேம்பாட்டு புதுப்பிப்பின் ஒரு துணைப் பகுதியாக இலங்கை மேம்பாட்டு புதுப்பிப்பு



உள்ளது.

2025 ஏப்ரல் பதிப்பான டாக்ஸிங் டைம்ஸானது, பிராந்திய வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் 5.8 சதவீதமாகக் குறையும் அக்டோபர் கணிப்புகளை விட 0.4 சதவீத புள்ளிகள் குறைவாக இருக்கும் —2026 இல் 6.1 சதவீதமாக உயரும் என்று கணித்துள்ளது.

இந்தக் கண்ணோட்டம், மிகவும் நிச்சயமற்ற உலகளாவிய நிலப்பரப்பு, வரையறுக்கப்பட்ட நிதி இடம் உள்ளிட்ட உள்நாட்டு பாதிப்புகளுடன் இணைந்து அதிகரித்த அபாயங்களுக்கு உட்பட்டது.

பிராந்தியத்தில் உள்நாட்டு வளத் திரட்டலின் நிலையை பகுப்பாய்வு செய்யும் ஒரு சிறப்பு அத்தியாயம் இதில் அடங்கும்.

பெரும்பாலும் அதிக வரி விகிதங்கள் இருந்த போதிலும், பிராந்தியத்தின் வரி வருவாய் வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்களுக்கான சராசரியை விடக் குறைவாகவே உள்ளது.

அதிகரித்து வரும் சவாலான உலகளாவிய பொருளாதார சூழலுக்கு மத்தியில், மீள்தன்மையை மேம்படுத்த, வரிக் கொள்கை மற்றும் நிர்வாகத்தில் உள்ள திறமையின்மையை நாடுகள் எவ்வாறு நிவர்த்தி செய்து வருவாயை அதிகரிக்க முடியும் என்பதை அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.

# விரைவில் யாழ்ப்பாணத்தில் பாஸ்போர்ட் அலுவலகம்




யாழ்ப்பாணத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில் இன்னும் ஓரிரு வாரங்களில் இயக்கு நிலையை அடையக்கூடிய வகையில், யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகத்துக்கான பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடந்த தை மாதம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் அமைக்கப்படும் என்ற அறிவித்தலை விடுத்திருந்தார்.

இதன்போது கடவுச்சீட்டு அலுவலகத்துக்காக மாவட்டச் செயலகத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தையும் அவர் பார்வையிட்டிருந்தார். இதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே, கடவுச்சீட்டு அலுவலகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (22ம்பக்கம்)

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம். செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# இந்த ஆயுதங்கள் பிள்ளையானுக்கு எப்படிக் கிடைத்தன?

பிள்ளையானின் அதி நவீன ஒரு தொகுதி ஆயுதங்களை மீட்டுள்ளதாகவும் ஒருவர் தானாகவே சென்று காட்டிக் கொடுத்துள்ளதாகவும் தகவல் வெளியாகின்றன.

பிள்ளையானின் அலுவலகத்தில் இருந்து இரண்டு நவீன இயந்திரத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாக மட்டக்களப்பு காவல்துறை வட்டாரங்களில் இருந்து செய்திகள் கசிந்துள்ளன.

அண்மையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மட்டக்களப்பில் உள்ள பிள்ளையானின் அலுவலகத்தில் வைத்து பிள்ளையானைக் கைது செய்த போது அந்த அலுவலகத்தில் இரண்டு Colt MK18 1 M203 நவீன இயந்திரத் துப்பாகிகள் இருந்ததை கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்ததாகக் கூறப்படுகின்றது.

Colt MK18 1 M203 என்ற இயந்திரத் துப்பாக்கிகள் இலங்கையில் விசேட அதிரடிப் படையில் கூட ஒரு சில வீரர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்ற துப்பாக்கிகள்.

விலையுயர்ந்த அமெரிக்கத் தயாரிப்பான M-16 நவீன இயந்திரத் துப்பாக்கியில், M203 கிரனேட் ஏவிகள் (grenade launchers) பொருத்தப்பட்டிருக்கும் சக்தி வாய்ந்த துப்பாக்கிகள். அரச படையினர் கூட சாதாரணமாகப் பாவிக்காத



இந்த வகைத் துப்பாக்கிகள் மட்டக்களப்பிலுள்ள ஒரு அரசியல் கட்சி அலுவலகத்தில் இருப்பது கண்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அதிர்ச்சி அடைந்ததாகக் கூறப்படுகின்றது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அந்தத் துப்பாக்கிகள் முன்னைய அரசாகத்தின் கால கட்டத்தில் வழங்கப்பட்டதாக கூறப்பட்டதாம்.

இரண்டு துப்பாக்கிகளும், மட்டக்களப்பு காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# பிள்ளையான் மீது சி.ஐ.டியினால் விசாரணை நடத்தப்பட வேண்டும் -அருட்தந்தை தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு தொடர்பு உள்ளதென்பதை நிராகரிக்க முடியாதென கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப் பேச்சாளர் சிரில் காமினி தெரிவித்துள்ளார்.

சிறப்பு அறிக்கையை ஒன்றை வெளியிட்டுள்ள கத்தோலிக்க திருச்சபை இதனை குறிப்பிட்டுள்ளது. இதன் போது பிள்ளையானுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சேனல் 4 ஒளிபரப்பிய ஆவணப்படத்தில் முதன்முதலில் வெளிப்படுத்தப்பட்டது எனவும், இதனை, பிள்ளையானின் முன்னாள் தனிப்பட்ட செயலாளர் ஆசாத் மௌலானா வெளியிட்டிருந்தார் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன் பிள்ளையானுடன் மிக நெருக்கமாக பணியாற்றியவரே ஆசாத் மௌலானா எனவும், அந்த நபர்தான் பிள்ளையானுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் உள்ள தொடர்பை வெளிப்படுத்தினார் எனவும், ஆனால் கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பாகவே பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் பிள்ளையானின் தொடர்பை நாம் நிராகரிக்க முடியாது எனவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான இந்தக் கைதும் விசாரணையும் எந்த அளவிற்கு நடைபெறும் என்பது தங்களுக்குத் தெரியாது எனவும்.அது குற்ற புலனாய்வு பிரிவிற்கு தெரியும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பிள்ளையான் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை முடிந்ததும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணையை குற்றப் புலனாய்வுத் துறை தொடங்கும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஜஹ்ரான் ஹாசிமே என்பதை கத்தோலிக்க திருச்சபை நிராகரிப்பு



உயிர்த்த ஞாயிறுதாக்குதலின் பிரதான சூத்திரதாரி தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் ஜஹ்ரான் ஹாசிம் என அமெரிக்காவின் எவ்பிஜ தீர்மானித்திருப்பதை இலங்கை கத்தோலிக்க திருச்சபை ஏற்க மறுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்பிரதான சூத்திரதாரி ஜஹ்ரான் ஹாசிமே என எவ்பிஜயின் விசேட முகவர் மெரிலீ ஆர் குட்வின் தெரிவித்துள்ளார் என சமீபத்தில் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அமெரிக்காவின் கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் தாக்கல் செய்த சத்தியக் கடதாசியில் அவர் இதனை தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை நிராகரித்துள்ள கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் பேச்சாளர் அருட்தந்தை ஜீட்கிருசாந்த பெர்ணாண்டோ இலங்கை அதிகாரிகளுடனோ அல்லது இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையுடனோ கலந்தாலோசனைகளை மேற்கொள்ளாமல் எவ்பிஜ எவ்வாறு இந்த முடிவிற்கு வந்தது என கேள்வி எழுப்பியுள்ளார்.

பல ஆணைக்குழுக்களின் அறிக்கைகளும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் சட்டமா அதிபரும் சனல் 4 அம்பலப்படுத்திய விடயங்களும் ஜஹ்ரான் ஹாசிம் தனியாக செயற்படவில்லை பெரும் சதியொன்று இடம்பெற்றுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளன என்பதை ஜீட் கிருசாந்த பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

எங்களுக்கும் இது குறித்த சந்தேகங்கள் உள்ளன, மேற்கூறப்பட்ட அனைத்தையும் அடிப்படையாக வைத்து பார்க்கும்போது ஜஹ்ரான் ஹாசிமிற்கு பின்னால் யாரே இருந்தனர் என்பது தெளிவாகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்பிஜயின் விசாரணை முறைகள் குறித்து கேள்வி எழுப்பியுள்ள அவர் எவ்பிஜ முகவர் எப்படி விசாரணைகளை மேற்கொண்டார், இலங்கையில் அவர்கள் யாரை சந்தித்தனர், அவர்கள் எந்த அடிப்படையில் இந்த முடிவிற்கு வந்தனர் என கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்பிஜ எங்களுடன் பேசவில்லை ஆகவே அவர்கள் சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் பேச்சாளர் அருட்தந்தை ஜீட் கிருசாந்த பெர்ணாண்டோ கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை விசாரிக்கும் குழுவில் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தை பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய வழங்கினார். அதன்படி, விசாரணை அறிக்கையை ஆய்வு செய்வதற்காக, சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்ட தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழு, ஐந்து உறுப்பினர்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்கும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் ஐவர் கொண்ட பொலிஸ் குழுவொன்றை நியமித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மானதுங்க தெரிவித்துள்ளார். சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்ட இந்த குழுவிற்கு தலைமை தாங்குகின்றார்.சிஐடிக்கு பொறுப்பான பிரதிபொலிஸ்மா அதிபர்.சிஐடியின் இயக்குநர், பயங்கரவாத விசாரணை பிரிவின் இயக்குநர் ஆகியோரும் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

# ட்ரம்ப்பின் மிரட்டலுக்கு வேறு விதமாகப் பதிலளித்த மன்னர்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்து கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பதாக மிரட்டிவரும் நிலையில், கனடாவின் மன்னர் தான் தான் என அழுத்தம் திருத்தமாக கூறியுள்ளார் மன்னர் சார்லஸ்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்து கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பதாக மிரட்டி வரும் நிலையில் மன்னர் சார்லஸ் அது குறித்து எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என பலரும் கவலை தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் ட்ரம்பின் மிரட்டல் குறித்து சற்றும் கவலைப்படாமல், பதறாமல், தான் அப்படியெல்லாம் சொல்ல வேண்டியதில்லை, அது தன் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் நாடு என்பதை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தியுள்ளார் மன்னர் சார்லஸ்.

ஆம், சமீபத்தில் இத்தாலிக்கு அரசுமுறைப்பயணம் மேற்கொண்டிருந்த மன்னர் சார்லஸ், இத்தாலி நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, இத்தாலி பிரித்தானிய உறவு குறித்து பேசியதோடு நிறுத்தி விடாமல், முக்கிய த்துவம் வாய்ந்த மற்றொரு விடயம் குறித்தும் பேசினார்.

நாளை Ravennaவுக்குச் செல்லும் நான் பிரித்தானியா மற்றும் கனடாவின் மன்னர் என்னும் முறையில், Ravenna நாஸி ஜேர்மனியிடமிருந்து விடுதலை பெற்றதன் பெரும் பெருமை மிக்க 80ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ள இருக்கிறேன் என்றார் மன்னர் சார்லஸ்.

Ravennait ஜேர்மனியிடமிருந்து விடுவிப்பதில் பிரித்தானிய மற்றும் கனேடிய படைகள் முக்கியப் பங்காற்றின.

ஆக ,ட்ரம்பின் மிரட்டல் உருட்டல்களுக்கெல்லாம் பதிலளித்துக் கொண்டிருக்காமல், காத்திருந்து சரியான நேரத்தில், உலகமே பார்க்க இத்தாலி நாடாளுமன்றத்தில், தான் தான் கனடாவின் மன்னர் என பறைசாற்றி விட்டார் மன்னர் சார்லஸ்.



# ரணிலுக்கு இலஞ்சம் ஊழல் ஆணைக்குழுவினால் அழைப்பு! மைத்திரிபால சிறிசேனாவிடம் 7 மணி நேரம் வாக்கு மூலம் பதிவு!



இன்று 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றிய போது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாக பெற்று அதனை பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ரணில் விக்ரமசிங்க கடந்த 10 ஆம் திகதி சாமர சம்பத் தசநாயக்கவின் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். எனவே, இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக இன்று 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குமூலம் வழங்கிய பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார். அரசியல்வாதிகள் உட்பட பலருக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கியமை தொடர்பான விசாரணைகளுக்காக வாக்குமூலம் வழங்குவதற்கு மைத்திரிபால சிறிசேன குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் 21 ஏப்ரல் 2025 திங்கட்கிழமை காலை ஆஜராகியிருந்தார். இதன் போது, மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து 7 மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் வாக்கு மூலம் வழங்கிய பின்னர் அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க தனது வீட்டை ஒப்படைக்குமாறு கோரி இதுவரை தனக்கு கடிதம் வரவில்லை என்றும், கிடைத்தால் அதை ஒப்படைப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதற்கிடையில் அமெரிக்க சிஐஏ வெளியிட்ட அறிக்கை, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னால் ஐஎஸ்ஐஎஸ் தான் மூளையாக செயல்பட்டது என்பதை தெளிவாகக் காட்டுகிறது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறைக்கு அவர் வழங்கிய ரகசியத் தகவல்களை வெளியிடுவதா? இல்லையா? என்பதை அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஈஸ்டர் சூத்திரதாரியைக் கண்டு பிடிக்க இன்று ஒரே ஒரு நபர் மட்டுமே தேவை என்று கூறிய முன்னாள் ஜனாதிபதி, இந்த நாட்டின் ஜனாதிபதியாக மீண்டும் வர தனக்கு விருப்பமில்லை என்றும் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலால் தான் வருத்தமடைந்ததாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த காலத்தில் பல்வேறு குற்றங்களைச் செய்ததாக பிள்ளையான் மீது குற்றம் சாட்டப்பட்டதாகவும், அத்தகைய நபருக்கு அமைச்சர் பதவி வழங்கியது தவறு என்றும் அவர் கூறினார்.

## ஈஸ்டர் விசாரணையை முடக்கத் தயாராகும் கும்பல்

ஈஸ்டர் விசாரணையை சீர்குலைக்கும் சமீபத்திய முயற்சிகள் பற்றிய தகவல்கள் வெளிவந்துள்ளது.புதிய இரண்டு நீதிமன்ற உத்தரவுகள் தற்போதைய பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன மற்றும் தற்போதைய குற்றவியல் புலனாய்வு பகுப்பாய்வு மற்றும் தடுப்பு பிரிவின் இயக்குநர் சானி அபேசேகர ஆகியோரை குறிவைத்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

மேலும் இரண்டு உத்தரவுகளும் தற்போது அவசரமாக மேற்கொள்ளப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு விசாரணைகளை சீர்குலைக்கும் நோக்கில் உள்ளன என்பது தெளிவாகுவதாகவும் தெரியவந்துள்ளதுர்.

இதைக் கோரும் முதல் உத்தரவு, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நியமிக்கப்பட்ட குழுவால் முன் வைக்கப்பட்ட ஒரு முன்மொழிவை செயல்படுத்தவும், தொடர்புடைய துறைகளுக்கு உத்தரவிடவும் கோரியுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக நடந்து வரும் விசாரணைகளை சீர்குலைக்கும் நோக்கில் இரண்டு உத்தரவுகளை மேல்முறையீடு செய்ய நீதிமன்றத்திற்குச் செல்ல ரணில் மகிந்த கோத்தபாய அணி தயாராகி





வருகிறது. நடவடிக்கை எடுக்க விசாரணைக் குழுக்கள் தயாராகி வருவதாகவும், இவ்வாரம் நீதிமன்ற நடவடிக்கைகள் முறையாக மீண்டும் தொடங்கி அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாராவதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்ற சிவனேசத்துரை சந்திரகாந்தன் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கவலையடைவதற்கு காரணம் உள்ளதாகவும், அதனை எதிர்காலத்தில் அனைவரும் அறிந்து கொள்ள முடியும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். எனவே, இந்த விடயம் தொடர்பில் விசாரணைக் குழு உரிய முறையில் விசாரணைகளை நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். விசாரணைகளை தொடர்ந்து சட்டமா அதிபரால் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும். இதனையடுத்து நீதிமன்றத்தின் ஊடாக சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்கப்படும்.

ரணில் நாமல் ராஜபக்ஷ மற்றும் சரத் வீரசேகர போன்றோர் பதற்றமடைவது தொடர்பில் எமக்கு எவ்வித ஆச்சரியமும் இல்லை என்று நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தினர் வசமுள்ள யாழ்.போதனா வைத்தியசாலைக் காணியை விடுவித்துத் தாருங்கள் - டாக்டர் யமுனாநந்தா

யாழ்ப்பாணம் கொட்டடி மீனாட்சி புரத்தில் உள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான காணியை விடுவித்துத் தருமாறு வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

இக்காணி தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் கொட்டடி - மீனாட்சிபுரம் பகுதியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான 1.4 ஏக்கர் பரப்பளவுள்ள காணி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இந்த காணியை விடுவித்து தரும்படி கேட்டு வருகிற போதும் இன்று வரை காணி விடுவிக்கப்படவில்லை.

இக்காணி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மேலதிக அபிவிருத்தி தேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியாகும்.

இந்த காணியில் பல வருடங்




களாக இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால் காணியை யாழ். போதனா வைத்தியசாலையின் தேவைக்காக பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இக் காணியை உடனடியாக விடுவித்து தருவதற்கு வட மாகாண ஆளுநரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலையின் தேவைகள் அதிகரித்துவரும் தற்போதைய சூழ்நிலையில் இந்த காணி அவசியமானது எனவும் துரித நடவடிக்கை எடுத்து காணியை விடுவித்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு கைகொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## 40 வருடங்களுக்கு மேலாக யுத்தமுனையில் நின்ற சரத் பொன்சேகாவுக்காக குரல் கொடுக்காதவர்கள் பிள்ளையானுக்காக குரல் கொடுப்பது ஏன்?

40 வருடங்களுக்கு மேலாக இலங்கை இராணுவத்தில் கடமை புரிந்து இராணுவ தளபதியாகவும் இருந்த சரத் பொன்சேகாவை மகிந்த அரசாங்கத்தால் பிடித்து சிறையில் போடப்பட்டு அவருக்கு இராணுவத்தில் கொடுக்கப்பட்ட உயரிய விருதுகள் அனைத்தையும் பறித்து சிறையில் போட்டார்கள். ஆனால் அந்த நேரத்தில் எந்த ஒரு சிங்கள அமைச்சரோ அல்லது சிங்கள பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது சட்டத்தரணியோ பொன்சேகாவுக்கு ஆதரவாக வாய் திறக்கவில்லை.

இன்று மஹிந்த குடும்பத்தால் உருவாக்கப்பட்ட கூலிப்படை தலைவரான பிள்ளையானை சிறையில் பிடித்து போட்ட உடனே அவருக்கு ஆதரவாக மஹிந்தவின் சகாக்கள் துள்ளி குதிக்கின்றார்கள் என்..? இன்று மஹிந்த குடும்ப சகாக்களால் பிள்ளையானுக்கு தேசப்பற்று என்று ஒரு அங்கீகாரத்தையும் கொடுத்துள்ளார்கள் அப்படி என்றால் மஹிந்த அரசோடு சேர்ந்து தமிழ் மக்களை கொன்று ஒழிப்பதற்காக எப்படி மஹிந்த அரசுக்கு இவர் வேலை செய்து இருக்கிறார் என்று சிந்தித்துப் பாருங்கள் மக்களே...!

# பிள்ளையான் செய்த தவறு ஒன்று மட்டுமல்ல! தோண்டத் தோண்ட நிறையவே வருகின்றன



கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியரை காணாமலாக்கியது மாத்திரமே பிள்ளையான் செய்த ஒரே தவறு என்று தீர்மானம் எடுத்து விட வேண்டாம். அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. தடுப்புக்காவலில் வைத்து அவரிடம் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் வெளியாகி வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து எதிர்க்கட்சியினர் வீண் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் மீதான விசாரணைகள் தொடர்பில் எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் ஏன் இந்தளவு தூரம் அச்சம் கொள்கிறார்கள் என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது. குற்றப் புலனாய்வுத் திணைக்களமே விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. விசாரணைகளின் அடிப்படையில் சிலர் கைது செய்யப்பட்டுமுள்ளனர். சிலரிடம் சாட்சிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் எதிர்த்தரப்பினர் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உதய கம்மன்பில, நாமல் ராஜபக்ஷ போன்றோர் பதற்றத்தில் வெவ்வேறு கருத்துகளையும் வெளியிட்டு வருகிறார்கள். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஆறு வருடங்கள் கடந்திருந்தாலும் ஐந்தரை வருடங்கள் வரை விசாரணைகளை மூடிமறைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதன் அடிப்படையிலேயே நாங்கள் தற்போது விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.

இந்த ஆறு வருடங்களில் முறையான விசாரணைகளை முன்னெடுத்திருந்தால் தற்போது இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் உள்ளிட்ட பின்னணியிலுள்ள சகலத் தரப்பினரையும் நாட்டுக்கு வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருந்திருக்கும். ஆனால் கடந்த ஐந்தரை வருடங்களிலும் விசாரணைகளை மூடிமறைப்பதற்காக அமைச்சரவையினூடாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒரு சில அறிக்கைகளின் பரிந்துரைகளை நடைமுறைபடுத்தாமலிருப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தது. விசாரணை அதிகாரிகள் இடமாற்றம் செய்திருந்தார்கள். ஒரு சிலர் இந்த நாட்டில் இருக்க முடியாத நிலையை உருவாக்கியிருந்தார்கள். சாட்சிகளை மூடி மறைத்தார்கள். இந்தக் பின்னணியில் கடந்த ஆறு மாதங்களே விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளின் போது ஏற்கனவே மூடிமறைக்கப்பட்ட கண்டு கொள்ளப்படாத விடயங்கள் வெளிப்பட்டு வரும் நிலையில் இவர்கள் அச்சம் கொள்வது மக்களுக்கு புரியுமென்று நம்புகிறோம். எனவே, விசாரணைகள் தொடர்பில் மக்கள் வீண் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் புதிதாக சிலர் கைதுசெய்யப்பட்டு அவர்களிடம் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் அடிப் படையில் மேலும் சிலருக்கு அழைப்பாணை விடுக்கப்படலாம். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இம்முறை முறையாக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள் என்பது எதிர்த்தரப்பினரின் வீண் அச்சத்திலிருந்தே தெரிகிறது.



கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரை காணாமலாக்கிய சம்பவம் தொடர்பில் மாத்திரமே பிள்ளையான் கைதுசெய்யப்படாத நீங்கள் அறிந்து வைத்திருந்தாலும், அவருக்கு எதிராக மேலும் பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பல்வேறு சாட்சிகளும் கிடைத்து வருகின்றன. விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. அந்த விசாரணைகளின் முன்னேற்றங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும். எனவே, பேராசிரியரை காணாமலாக்கியது மாத்திரமே பிள்ளையான் செய்த ஒரே தவறு என்று தீர்மானம் எடுத்து விட வேண்டாம்.

அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. தடுப்புக்காவலில் வைத்து முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன. அவற்றில் ஒருசில சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகும். ஒருசில குற்றச்சாட்டுகள் மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவையாகும். விசாரணைகளுக்கமைய இருவர் கைதுசெய்யப்பட்டும் இருக்கிறார்கள்.

எனவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கோரி வந்த பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட தரப்பினரும் திருப்தியடையக் கூடிய வகையில் விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. விசாரணைகள் முறையாக இடம் பெறுகின்றன என்பதை திட்டவட்டமாக கூறமுடியும். உரிய நேரத்தில் பிரதான சூத்திரதாரிகளை வெளிப்படுத்துவோம். உதயகம்மன்பில போன்றவர்கள் அச்சம் கொள்கிறார்கள் என்பதற்காக அரசாங்கம் பதற்றமடையாது.

உதய கம்மன்பில பிள்ளை யானை சந்தித்து விட்டு வெளியிட்ட கருத்தினூடாக எவ்வாறான தகவலை வழங்கினார் என்பது சமூக புரிந்துணர்வுள்ள சகலருக்கும் தெரியும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் எதனையும் கூறவில்லை என்றே கம்மன்பில கூறியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்படுகிறார்கள் என்றால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் எதனையும் குறிப்பிடவில்லை என்று கூறுகிறார். கம்மன்பிலவின் அந்த தகவலிலுள்ள ஆழம் என்னவென்பதை குற்றப்புலனாய்வு விசாரணைகள் தொடர்பில் ஓரளவு ஞானம் இருப்பவர்களுக்கு புரியும்.

அது எங்களுக்கு அவசியமில்லை. இன்னும் சிறிது காலம் செல்லும்போது விசாரணைகளின் அடிப்படையில் இந்தச் சம்பவத்தின் பாரதூரம் எவ்வளவு காலத்திலிருந்து திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும். அது தொடர்பில் விசாரணைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன'' என்றார்.

இதேவேளை கருணா பிள்ளையான் ஆகியோர் மக்களைக் கொன்ற பெரும் குற்றவாளிகள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த போது பெரும் குற்றம் இழைத்தவர்கள் தான் கருணா மற்றும் பிள்ளையான். இவ்வாறு குற்றம் இழைத்தவர்களுக்கு அரசியலில் பதவிகள் வழங்கப்பட்டமை தவறான முடிவாகும் என்றார்.

# புலம்பெயர் தமிழர்களை மகிழ்ச்சிப்படுத்த பிள்ளையானை அநுரா கைது செய்தார் என்கிறார் ஊழல்வாதி ராஜிதசேன

புலம்பெயர் ஈழத்தமிழர்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டுமெனில் கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் தண்டிக்கப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் அரங்கேற்றியிருக்கும் நாடகமே பிள்ளையானின் கைதாகும் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



களுத்துறை பிரதேசத்தில் 19 ஏப்ரல் 2025 சனிக் கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் வெளியேறியதால் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வீழ்ச்சியடைந்தது. வேலுப்பிள்ளை பிரபாகரன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போராட்டங்களுக்கு தலைமை வகிக்கவில்லை.

விஜேவீரவைப் போன்று அவரும் தலைமறைவாகவே இருந்தார். இந் நிலையில் போராட்டத்தை வழி நடத்திய ஒருவரே கருணா அம்மான். அவரது மிக முக்கிய சகாவாக பிள்ளையான் இருந்தார்.

ஆணையிறவு உட்பட 14 இராணுவ முகாம்களை சுமார் 4 நாட்களில் புலிகள் அழித்தனர். இந்த அனைத்து தாக்குதல்களையும் கருணா அம்மானே மேற்கொண்டார். கருணா அம்மானின் மாற்றத்தினாலேயே கிழக்கு மாகாணத்தை புலிகள் இழந்தனர்.

கருணா இருந்திருந்தால் இராணுவத்தினரால் ஒரு போதும் தொப்பிகலவை கைப்பற்றியிருக்க முடியாது. இந்திய இராணுவம் கூட தொப்பிகலவுக்குச் செல்ல அஞ்சியது.

கருணா அம்மான் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே தொப்பிகலவையும் கைப்பற்ற முடிந்தது. கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் புலிகளிலிருந்து பிரிந்த பின்னரே என்றுமே கைப்பற்றப்ப முடியாது என பிரபாகரன் சவால் விடுத்திருந்த தோரா போரா மலையைக் கூட கைப்பற்ற முடிந்தது.

அது மாத்திரமின்றி கிழக்கு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னரே ஆயுத பரிமாற்றமும் நிறுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் தாம் பாதுகாக்கப்படுவோம் என்று நம்பியே கருணாவும் பிள்ளையானும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினர். அவ்வாறிருக்கையில் அரசாங்கம் அவர்களைக் காட்டிக் கொடுத்தால் அது நியாய மற்றது.

இதன் ஊடாக வடக்கு புலம்பெயர் தமிழர்கள் ஊடாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். கருணா மற்றும் பிள்ளையான் கைது செய்யப்படுவது புலம்பெயர் ஈழத்தமிழர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகும்.

இதனை நோக்கமாகக் கொண்டே அரசாங்கம் இந்த நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறது. கருணா, பிள்ளையான் கொல்லப்படும் நாளே புலம்பெயர் ஈழத்தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியடையும் நாளாகும். கலாநிதி என்.எம். பெரேரா கூறியதைப் போன்று இன்று எதிரியின் எதிரி நண்பனாகியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் எதிரி கருணா அம்மான். கருணா அம்மானின் எதிரி புலம் பெயர் ஈழத்தமிழர்கள். புலம் பெயர் ஈழத்தமிழர்களின் நண்பன் ஜே.வி.பி. ஆகும். இது வரலாற்று பேரழிவுக்கு வழிவகுக்கும் என்றார்.

இந்த ஊழல்வாதி ராஜிதசேனாரத்னாவுக்கு ஆனையிறவு இராணுவமுகாம் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய விடுதலைப்புலிகளின் தளபதிகள் பற்றியோ வ்டுதலைப்புலிகளின் போராற்றல் பற்றியோ புரிதல் கிடையாது.

அது மாத்திரமல்ல விடுதலைப் புலிகளையும் போராட்டத்தையும் காட்டிக் கொடுத்ததற்காக அரச இயந்திர துணையுடன் கொலை கொள்ளை பாலியல் கொலை செய்தவர்களை தண்டிக்கக் கூடாது என்று சொல்லும் இவர் எல்லாம் சிங்களத்து அரசியல் வாதி

ஆனால் கருணா பிள்ளையான் போன்றோர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தான் இராணுவம் போரில் வெற்றி பெற்றது என்பது உண்மை. மன்னராட்சி முதல் இன்றுவரை காட்டிக் கொடுக்கும் துரோகிகளை தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்தி விட்டு தேவை முடிந்ததும் தூக்கி எறிவதும் சாதாரண நிகழ்வு என்பதை வரலாறு திரும்பத் திரும்ப நிருபித்துக் கொண்டே இருக்கின்றது.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

### கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# பிள்ளையான் கைது:- ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கான எச்சரிக்கையா?

புலியைப் பிடிப்பதற்குப் பதிலாக எலியையா பிடித்து வீரம் பேசுகிறது NPP? என்று கேட்கிறார்கள் பலரும். அவர்களுடைய கேள்வி நியாயமானதே! ஏனென்றால், தங்களிடம் 400 கோவைகள் உண்டு. நாட்டுக்குத் துரோகமிழைத்தவர்களும் ஊழல்வாதிகளும் குற்றவாளிகளும் தப்பவே முடியாது. அத்தனை குற்றச் சாட்டுகளுக்கும் தவறுகளுக்கும் ஆதாரம் உண்டு. நிச்சயமாக தவறிழைத்த அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்தனை பேரும் தண்டிக்கப்படுவார்கள்..'' என்று முழங்கியவர்கள் NPP யினர். அப்படி முழக்கமிட்டுத் தான் (நம்பிக்கையூட்டித்தான்) ஆட்சியைக் கைப்பற்றியது NPP

ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் சொன்னமாதிரி எதுவுமே நடக்கவில்லை. அத்தனை பெருச்சாளிகளும் (பெருந்தலைகளும்) கால்மேல் கால் போட்டுக் கொண்டு தான் இருக்கின்றனர். அதற்குப் பதிலாக சிறு எலிகளைப் பிடித்துச் சிறையிலடைத்து வீரம் பேசுகிறது NPP இதனால் தான் புலியைப் பிடிப்பதற்குப் பதிலாக எலியைப் பிடித்து வீரம் பேசுகிறது NPP பகடி செய்கிறார்கள் மக்கள்.

அநுர குமாரதிசநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று, NPP அரசாங்கம் ஆட்சியமைத்த போது மக்களிடம் மிகப் பெரிய எதிர்பார்ப்பிருந்தது. NPP ஒரு மாற்றுச் சக்தி என்ற வகையில் மாற்று ஆட்சியொன்றை வழங்கப் போகிறது. நாட்டில் நிச்சயமாக மாற்றம் நிகழப் போகிறது என. இரண்டாவது, நாட்டை மோசமான நிலைக்குத் தள்ளிய, ஊழல் செய்த முன்னாள் ஆட்சியாளர்களின் மீது, அவர்களுடைய தவறான செயல்களின் மீது NPP நடவடிக்கை எடுக்கும் என.

NPP ஆட்சியில் ஆறு மாதங்கள் கடந்த விட்டது. மக்கள் எதிர்பார்த்ததைப் போல அல்லது NPP கூறியதைப் போல இவை இரண்டுமே நடக்கவில்லை. பதிலாக மக்களைத் திசை திருப்பும் விதமாக அல்லது மக்களுக்கு ஏதோ செய்திருப்பதாகக் காட்டுவதற்காக வடமத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளர் சாந்தி சந்திரசேன, மகிந்த ராஜபக்ஸவின் மகன் யோஷித ராஜபக்ஸ, பிள்ளையான், வியாழேந்திரன் என எலிகள் தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதில் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அண்மைய கைது பல வகையான அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. அவர் எதற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று இன்னும் சரியாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் வெளியே வந்துள்ள செய்திகள் இரண்டு விதமாக உள்ளன.

1.கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் இரவீந்திரநாத் 2006 டிசம்பரில் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவத்துடன் பிள்ளையானுக்குத் தொடர்பிருந்ததான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக. இது அவர்கைது செய்யப்பட்ட போது வெளியான செய்தி.

2. 2019 ஏப்ரல் 21 இல் நடந்த ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதல்களோடு பிள்ளையானுக்குத் தொடர்புள்ளதாகவும் அதைப்பற்றிய விசாரணைகளை நடத்த வேண்டியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இது பிந்திய செய்தி. இப்போது பிள்ளையானின் சாரதியும் கைது செய்யப்பட்டிருக்கிறார். போகிற போக்கைப் பார்த்தால் பிள்ளையான் தரப்பிலிருந்து மேலும் சிலர் கைதாகக் கூடும்.

இதை விட பிள்ளையான் மிகப் பெரிய குற்றவாளி. அவர் இலகுவில் தப்ப முடியாது. அவரைத் தேசப்பற்றாளர் என்று கம்மன்பில சொல்வது வெட்கக் கேடானது என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கிறார். இப்படி ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக அரசாங்கத் தரப்பிலிருந்து பிள்ளையானைப் பற்றி வருகின்ற சேதிகள் பல கேள்விகளை எழுப்புகின்றன.

பிள்ளையானின் இந்தக் கைது NPP அரசாங்கத்தின் அரசியல் ரீதியான நடவடிக்கை என்று அரசியல் நோக்கர்களால் பார்க்கப்படுகிறது. காரணம்,

1.வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தில் செல்வாக்குள்ள தரப்புகளை இலக்கு வைக்கும் NPP அரசாங்கத்தின் முதற்கட்ட நடவடிக்கை இது என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஏனென்றால், பிள்ளையான் கிழக்கு மாகாணத்தை



(கிழக்குப் பிராந்தியத்தை) பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு கட்சியின் தலைவர். கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். 2020 இல் அதிகூடிய வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர். இராஜாங்க அமைச்சராக இருந்தவர். 2024 தேர்தலில் அவர் வெற்றியீட்ட முடியவில்லை என்றாலும் கிழக்கின் வலுவான அரசியற் சக்தியாக பிள்ளையான் இருக்கிறார்.

குறிப்பாக வரவுள்ள உள்ளூராட்சித் தேர்தலையொட்டி கிழக்கிற்கான ஒரு வலுமிக்க அரசியற் கூட்டணியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான வியாழேந்திரனையும் கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனையும் இணைத்து உருவாக்கியிருக்கிறார்.

இதெல்லாம் அரசாங்கத்தின் 'இலங்கையர்களாக ஒன்றிணைவோம்' என்ற பொது அடையாளத்தின் கீழ் அனைத்துத் தரப்பினரையும் கரைக்கும் திட்டத்துக்கு பொருந்தாத, பிராந்திய அடையாளத்தை வலுவாக்கம் செய்யும் நடவடிக்கைகள் என்பதால், பிள்ளையான் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

2.பிள்ளையானின் கைது, முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள், அதற்கான விசாரணைகள் எல்லாம் ஏனைய தமிழ் அரசியற் சக்திகளுக்கு உள்ளூர விடுக்கப்பட்டதொரு எச்சரிக்கையாகும். குறிப்பாக வடக்கிலுள்ள முன்னாள் ஆயுதம் தாங்கிய தரப்புகளுக்கு, தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி போன்றவற்றுக்கு அப்பால் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏதோ ஒரு காலகட்டத்தில், பலவிதமான குற்றச் செயல்களோடு (குற்றப் பின்னணிகளோடு) சம்மந்தப்பட்டவை. ஆகவே அவற்றையும் குறி வைப்பதற்கான சாத்தியம் உள்ளது என்று அரசாங்கம் உள்ளூர உணர்த்துகிறது.

ஏனென்றால் 18 ஆண்டுகளுக்கு முன் காணாமலாக்கப்பட்ட பேராசிரியர் ரவீந்திரநாத்தின் விடயத்துக்காக பிள்ளையான் கைது செய்யப்படலாம் என்றால், அதையும் விடப் பாரதூரமான கொலைகள், கடத்தல்கள், குற்றச்சாட்டுகளோடு சம்மந்தப்பட்ட ஏனைய அரசியற் தரப்பினர்களும் (முன்னாள் இயக்கத்தினரும்) தப்ப முடியாது என்றுதானே அர்த்தமாகும்.

3.இவ்வாறு உள்ளூர அச்சத்தை உண்டாக்குவதன் மூலம் அவை அரசாங்கத்தை மூர்க்கமாக எதிர்ப்பதை விடுத்து, இரகசிய உடன்படிக்கைகளுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படும். அல்லது தணிவு நிலையில் தமது அரசியலை முன்னெடுக்க வேண்டிய நிலையை உருவாக்கும். இது பிராந்திய அரசியலின் கூர்முனையை மழுங்கடிக்கச் செய்வதற்கான ஓர் உபாயமாகக் கருதப்படுகிறது.

ஏற்கனவே ஆட்சிலிருந்த ஐ. தே. க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பெரமுன போன்றவையெல்லாம் போட்டிக்கு இனவாதத்தை வளர்க்கும் அரசியல் உபாயத்தைக் கொண்டவை. இதற்காக அவை தமிழ் மக்களைச் சீண்டும் விதமாக அல்லது தமிழ் மக்களுக்கு நேரடிப் பாதிப்பை உண்டாக்கும் விதமாக அரசியலை முன்னெடுத்தவை. இவ்வாறு செய்வதன் மூலமாக தமிழ் மக்களை தமிழ்த்தேசியத்தின் பக்கமாகத் திரள வைப்பதும் அதற்கு எதிராக சிங்களத் தேசியவாத்தை வலுப்படுத்தி, அதனுடைய பக்கமாக சிங்கள மக்களை அணி திரள வைப்பதுமே அந்தக் கட்சிகளின் அரசியல் உபாயமாக உத்தியாக இருந்தது. இனவாதத்துக்கு இனவாதம் போட்டியான இனவாதத்தை வளர்த்துக் கொள்வது. அதாவது உனக்கு நான். எனக்கு நீ என்ற விதமாக.

இந்த அடிப்படையில் தான் கடந்த காலத்தில் நாய்களின் தலையை வெட்டி தமிழ் வேட்பாளர்களின் வீடுகளுக்கு முன்பாக வைக்கப்பட்டதும் தமிழ்ப் பகுதிகளில் கிறிஸ் பூதத்தை நடமாட விட்டதும் கூட நடந்தது. ஏனைய சிங்களக் கட்சிகளுக்கு இனவாதம் ஒரு முதலீடு மட்டுமல்ல, அதற்குப் பிராந்திய அரசியலும் தேவையாக இருந்தது. பிராந்திய அரசியல் தான் இலங்கையைப் பொறுத்தவரையில் இனவாத அரசியலுக்கான முதலீடாகும்.

ஆனால், NPP யின் அணுகுமுறையோ வேறாக இருக்கிறது. அது, எதிர்முனையைப் பலப்படுத்துவதை விடப் பல வீனப்படுத்தவே விரும்புகிறது. அதனுடைய நோக்கம் பிராந்திய அரசியலை இல்லாதொழிப்பதாகும். அதனால் தான் அது ஏனைய பிரதேசங்களையும் விட வடக்குக் கிழக்கை மையப்படுத்தித் தன்னுடைய வலுவைக் கூடுதலாகச்


**கட்டுரையாளர்:-**
**கிளிநொச்சியில் இருந்து**
**- கருணாகரன் -**




செலவழிக்க முயற்சிக்கிறது. இதன் மூலம் இலங்கையில் 75 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வந்த பிராந்திய அரசியலை முடிவுக்குக் கொண்டு வருவதோடு, முழு இலங்கையை மையப்படுத்திய அரசியலொன்றை ஸ்தாபிப்பதுமாகும்.

இதற்கு முன்பு இதற்கான அரைகுறை முயற்சிகளை ஐ.தே.க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன போன்றவை மேற் கொண்டிருந்தாலும் அவற்றுக்குள் நிறையத் தடுமாற்றங்கள் இருந்தன. One Nation One country ஏக்க ராஜ்ஜிய போன்ற பிரகடனங்களோடு இதற்கான முயற்சிகளை அவை எடுத்தாலும் பிராந்திய அரசியலை முடக்கும் எண்ணம் அவற்றுக்கிருக்கவில்லை.

ஏனென்றால், அவற்றினால் பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. அவற்றின் ஏஜென்டுகள் பிராந்தியத்திலிருந்தாலும் அவற்றினால் பிராந்தியத்திச் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. அந்த ஏஜென்டுகளை அவை பலப்படுத்தவும் முயற்சிக்கவில்லை. இதனால் மொத்தில் ஐ.தே.க, சுதந்திரக் கட்சி, பெரமுன வைப் பற்றி எதிர்மறைச் சித்திரமே தமிழ், முஸ்லிம், மலையக மக்களிடம் இருந்தது. NPP இதில் ஒரு மாறுதலான பாத்திரத்தை உருவாக்கியது வகிக்கிறது. அது சத்தமில்லாமல் அல்லது எதிர்பாராத விதமாக வடக்குக் கிழக்கு மலையகப் பிராந்தியத்தில் செல்வாக்கைப் பெற்றுள்ளது. இதனால், பிராந்திய அரசியலை இல்லாதொழிக்கும் அதனுடைய (சிங்கள மேலாதிக்க மனோநிலையினுடைய) அடிப்படையில் செயற்பட அதற்கு வசதிப்பட்டுள்ளது.

ஆனால், இது எவ்வளவுக்குச் சாத்தியம் என்பது கேள்வியே. ஏனென்றால் இது கத்தியில் நடப்பதற்கு ஒப்பானது. பிராந்திய மக்கள் சிங்கள மக்களையும் விட வேறுவிதமான பிரத்தியேகப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுப்பவர்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புகள் சிங்கள மக்களுடைய எதிர்பார்ப்புகளையும் விட வித்தியாசமானது. இதற்கு பிராந்திய சக்திகளை ஒடுக்குவது, கட்டுப் படுத்துவது, அச்சமூட்டுவது போன்ற நடவடிக்கைகளின் மூலம் தீர்வு காண முடியாது. எதிர்பார்க்கும் விளைவுகளை எட்டவும் முடியாது. அதற்குள் பிள்ளையான், வியாழேந்திரன் போன்றோரின் தலைகள் தான் உருளும். பலியாக்கப்படும். இது இதுவரையிலும் சிங்களத் தரப்புடன் ஒத்துழைத்த அல்லது சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஆதரவளித்த அரசியலுக்கு வழங்கப்படும் தண்டனையாகவும் உள்ளது. அப்படியென்றால் இன்னொரு நிலையில் இது பிராந்திய அரசியலைப் பலப்படுத்துவதாகவும் அமையும்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

19 ஏப்ரல் 2025 - 25 ஏப்ரல் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி தவரத்தினம் பேரின்பராணி

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி இருபாலையை வதிவிடமாக வும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களுடைய 31ம்நாள் நினைவு நாள் 12 ஏப்ரல் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி, அன்பு, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நன்னித்தம்பி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களின் 26வது ஆண்டு நினைவு நாள் 29 ஏப்ரல் 2025 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பரமநாதன்

வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு கனகசபை பரமநாதன் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2025 சனிக் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை பரமநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்வரெத்தினம் செல்வகுமார்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 20 ஏப்ரல் 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லத்தம்பி வரதராஜன்

புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களுடைய பத்தாவது ஆண்டு நினைவு நாள் 23 ஏப்ரல் 2025 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!**
**உறவுகளே!**
**மே மாதம்**
**உணவளிக்க முன் வாருங்கள்!**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




12 ஏப்ரல் 2025 சனிக்கிழமை வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு கனகசபை பரமநாதன் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 ஏப்ரல் 2025 சனிக்கிழமை எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி இருபாலையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஏப்ரல் 2025 சனிக்கிழமை எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி இருபாலையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஏப்ரல் 2025 சனிக்கிழமை எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி இருபாலையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தவரத்தினம் பேரின்பராணி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




18 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கேசவன் காயத்திரி தம்பதிகளின் செல்வப்புதல்வி திவிசா கேசவனின் 17வது பிறந்த நன்நாளுக்காகவும் (15 ஏப்ரல் 2025) செல்வப்புதல்வி யதிசா கேசவனின் 11வது பிறந்த நன்நாளுக்காகவும் (18 ஏப்ரல் 2025) புதல்விகள் இருவரும் தமது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 ஏப்ரல் 2025 ஞாயிற்றுக்கிழமை புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரத்தினம் செல்வகுமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 ஏப்ரல் 2025 புதன்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி செல்வகுமார் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




24 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஸ்ரீரங்கநாதன் கந்தசாமி அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும்.அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு றொபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




25 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு றொபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




25 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு றொபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




FEDERAL ELECTION / MONDAY, APRIL 28

#ItsOurVote

# Are you planning to vote?

## You can register and vote at your assigned polling station on election day if you:



- are a Canadian citizen
- are at least 18 years old
- prove your identity and address

Check your voter information card or visit elections.ca to find out where and when you can vote.

It's Our Vote

Visit elections.ca for the official information you need to vote

1-800-463-6868 / elections.ca / TTY 1-800-361-8935

Elections Canada






# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

**Suren Sornalingam BBA**

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா




SUNDAY
JUNE 01
2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com



# போப் பிரான்சிஸ்க்குப் பின் யார்? புதிய போப் பட்டியலில் 8 பேர்

ஈஸ்டர் திங்கள் தினத்தில் போப் பிரான்சிஸ் காலமாகி விட்டார். செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் ஈஸ்டர் அன்று தோன்றி 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை வாழ்த்திய மறுநாள், அவரது மறைவுச் செய்தி வந்து இருக்கிறது.

இப்போது மறைந்த போப் பிரான்சிஸ்கும், புதிய போப் தேர்வுக்கும் இடையே உள்ள காலம் தொடங்கி விட்டது. கத்தோலிக்க மரபுப்படி 'இருக்கை காலியாகி உள்ளது' என்ற காலம் இது. உலகம் முழுவதும் உள்ள கர்தினால்கள் கூடி புதிய போப்பை தேர்வு செய்வார்கள். உலகம் முழுவதும் மொத்தம் 253 கர்தினால்கள் உள்ளனர். அவர்களில் 138 பேர் மட்டுமே புதிய போப்பை தேர்வு செய்ய கூடுவார்கள்.

அவர்களில் இருந்து ஒருவர் தான் புதிய போப்பாக தேர்வு செய்யப்படுவார். இந்த தேர்வு நடைமுறையில் 80 வயதுக்கு மேற்பட்ட கர்தினால்கள் பங்கேற்க முடியாது. தற்போது புதிய போப் தேர்வில் 8 பேர் முன்னணியில் உள்ளனர். அவர்கள் விவரம்:

1.பியட்ரோ பரோலின்(வயது 70, நாடு: இத்தாலி)

வத்திக்கானின் மாநிலச் செயலராக இருக்கும் பியட்ரோ பரோலின், போப் பிரான்சிஸ் தலைமையில் 11 ஆண்டுகள் பணியாற்றினார். இவர் கடந்த 2014 ஆம் ஆண்டு போப் பிரான்சிசால், கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்டார். இவர் புதிய போப்பாக தேர்வு செய்யப்படும் பட்சத்தில் போப் பிரான்சிஸின் பாரம்பரிய வாரிசாக கருதப்படுவார்.

2.பிரிடோலின் அம்போங்கோ பெசுங்கு (வயது 65, நாடு :காங்கோ ஜனநாயகக் குடியரசு)

ஆப்பிரிக்கா மற்றும் மடகாஸ்கரின் ஆயர் பேரவைகளின் தலைவர் இவர். போப் பிரான்சிஸ் அறிவித்த திருமணமாகாத மற்றும் ஒரே பாலின தம்பதிகளை ஆசிர்வதிக்க பாதிரியார்களை அனுமதித்த உத்தரவை கடுமையாக எதிர்த்தவர். இன்றுவரை காங்கோவில் இது நடைமுறைப் படுத்தப்படவில்லை. போப் பிரான்சிஸ்சை 2023ல் நேரில் சந்தித்து தனது நிலை குறித்து விளக்கி ஆசிர்வாதம் பெற்றவர்.

3. விம் எய்க் (வயது 71, நாடு : நெதர்லாந்து)

கர்தினால் வில்லெம் ஜேக்கபஸ் எய்க். ஒரு முன்னாள் மருத்துவர். போப் 16ஆம் பெனடிக்டால் 2012ல் கர்தினாலாக நியமிக்கப்பட்டவர். மிகவும் பழமைவாதிகளில் ஒருவர். முதல் திருமணத்தை ரத்து செய்யாத நிலையில் சிவில் மறுமணங்களை பிரான்சிஸ் ஆதரிப்பதை கடுமையாக எதிர்த்தவர்.

4. பீட்டர் எர்டோ (வயது 72, நாடு: ஹங்கேரி)

ஐரோப்பாவின் ஆயர் மாநாடுகளின் கவுன்சிலின் முன்னாள் தலைவரும், மரியன்னை பக்தியுமான பீட்டர் எர்டோ, சமகாலத் திருச்சபையின் முக்கிய கர்தினாலாக விளங்கி வருகிறார். எர்டோவை 2003 ஆம் ஆண்டு போப் இரண்டாம் ஜான் பால் கர்தினாலாக நியமித்தார்.

5. லூயிஸ் அன்டோனியோ டாக்லே (வயது 67, நாடு: பிலிப்பைன்ஸ்)

'ஆசிய போப் பிரான்சிஸ்' என்று அழைக்கப்படும் கர்தினால் லூயிஸ், 2012 ஆம் ஆண்டு போப் 16ஆம் பெனடிக்ட்டால் கர்தினால் ஆக்கப்பட்டார். இவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஆசிய கண்டத்தில் இருந்து வரும் முதல் போப் ஆவார்.



6. ரேமண்ட் பர்க் (வயது 76, நாடு : அமெரிக்கா)

போப் பிரான்சிஸின் தாராளவாத போக்குகளை விமர்சித்தவர் ரேமண்ட் பர்க். குறிப்பாக செயற்கை கருத்தடை, ஓரின சேர்க்கையாளர்கள் குறித்த போப் பிரான்சிஸ் நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்தவர். போப் 16ஆம் பெனடிக்ட்டால் 2010ல் கர்தினாலாக நியமிக்கப்பட்டவர்.

7. மரியோ கிரேச் (வயது 67, நாடு: மால்டா)

உலக ஆயர் பேரவையின் தற்போதைய பொதுச் செயலாளராக இருக்கும் கர்தினால் மரியோ கிரெச், போப் பிரான்சிஸின் வாரிசாகக் கருதப்படுகிறார். 2020ல் போப் பிரான்சிஸ்சால் கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

8. மேட்டியோ ஜீப்பி (வயது 69, நாடு: இத்தாலி)

இத்தாலிய ஆயர் மாநாட்டின் தலைவர், மேட்டியோ ஜஜீப்பி ரோமில் பிறந்தார். இத்தாலியின் போலோக்னாவின் பேராயர் பதவியில் பணியாற்றினார். அவரை பிரான்சிஸின் வத்திக்கான் நிர்வாகத்தில் இணைத்தார். உக்ரைன் போரை நிறுத்த போப் தூதராக சென்றவர். 2019 ஆம் ஆண்டு போப் பிரான்சிஸ், அவரை கர்தினாலாக நியமித்தார். இவர்கள் தவிர கனடாவின் மார்க் ஓலெட், ஆஸ்திரியாவின் கிறிஸ்டோப் ஸ்கொன்போர்ன் ஆகியோரும் புதிய போப்புக்கான பட்டியலில் உள்ளனர். இவர்கள் இருவரும் 80 வயதானவர்கள்.

## புதிய போப் தேர்வு எப்படி நடக்கும்?

புதிய போப் தேர்வு சிஸ்டைன் ஆலயத்தில் நடைபெறும். தகுதியுடைய கர்தினால்கள் அங்கு கூடியிருப்பார்கள். எந்தவித தகவல் தொடர்பும் அங்கு இருக்காது. செவ்வக வடிவிலான காகித துண்டுகள் அவர்களுக்கு வழங்கப்படும். அதில்,' நான் புதிய போப்பாக தேர்வு செய்யப்பட்டேன்' என்ற வாசகம் இடம் பெற்று இருக்கும். அதன் பிறகு ஒவ்வொருவர் பெயரும் எழுதப்பட்டு இருக்கும். அதில் ஒவ்வொரு கர்தினால்களும் அவரவர் விருப்பத்தைச் தேர்வு செய்து, காகிதத்தை பாதியாக மடித்து, தேவாலயத்தின் முன் நடந்து சென்று அறிவிப்பார்கள். இதில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை பெற்றவர் புதிய போப்பாக தேர்வு செய்யப்படுவார்.

மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைக்கவில்லை என்றால், வாக்குச் சீட்டுகள் ஊசி மற்றும் நூலால் துளைக்கப்பட்டு, முடிச்சு போட்டு ஒரு தட்டில் வைக்கப்பட்டு எரிக்கப்படும். அப்போது கரும்புகை தேவாலயத்திற்கு வெளியே வெளியிடப்படும். போப் தேர்வு செய்யப்பட்டு விட்டால் வெள்ளை புகை வெளியிடப்படும். இதை வெளியில் கூடியிருக்கும் மக்கள் பார்த்து புரிந்து கொள்வார்கள். அதை தொடர்ந்து செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் புதிய போப் பெயர் அறிவிக்கப்படும். அவர் அங்கு சென்று மக்களுக்கு ஆசி வழங்குவார்.

## போப் இறந்தால் என்ன நடக்கும்?

போப் இறந்து விட்டால், அவரது மரணம் உறுதி செய்யப்பட்டு சான்றளிக்கப்பட்ட பின்னர், போப்பாண்டவர் குடியிருப்பை சீல் வைக்க வேண்டும். புதிய போப் பதவியேற்கும் வரை வாடிகனின் நிர்வாக கர்தினால் அனைத்து நிர்வாக மற்றும் நிதிப் பணிகளை மேற் கொள்கிறார். தற்போது கர்தினால் கெவின் பாரெல் இதை நிர்வகிக்கிறார். ஒரு போப் இறக்கும் போது வாடிகன் அலுவலகங்களில் உள்ள அனைத்து நிர்வாக தலைவர்களும் தங்கள் பதவியை இழக்கிறார்கள். அதை தொடர்ந்து கர்தினால்கள் கல்லூரியின் டீன் இறுதிச் சடங்கிற்காக அனைத்து கர்தினால்களையும் வாடிகனுக்கு வரும்படி அழைப்பார்.

போப் இறுதிச்சடங்கு திருப்பலியையும் அவரே நடத்துவார். அந்த பதவியை தற்போது வத்திக்கான் ஆயர்களுக்கான அலுவலகத்தின் ஓய்வு பெற்ற தலைவரான கர்தினால் ஜியோவானி பாட்டிஸ்டா ரே வகிக்கிறார். போப்பின் மரணம், போப்பாண்டவரின் இல்லத்தில் மரணத்தை உறுதிப்படுத்துதல், சவப்பெட்டியை பொது பார்வைக்காக செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்திற்கு கொண்டு செல்லுதல், இறுதி ஊர்வலம் மற்றும் அடக்கம் போன்ற நிகழ்வுகள் இனி அடுத்தடுத்து முறைப்படி நடக்கும். போப் பிரான்சிஸ் மறைந்த நான்காவது மற்றும் ஆறாவது நாட்களுக்கு இடையில் இவை செய்யப்படும்.

இறுதிச் சடங்கிற்குப் பிறகு, ஒன்பது நாட்கள் உத்தியோகபூர்வ துக்கம் அனுசரிக்கப்படுகிறது. இந்த கால கட்டத்தில் உலகம் முழுவதும் உள்ள கர்தினால்கள் அனைவரும் ரோமில் ஒன்று கூடுவார்கள். 15-20 நாட்களுக்குப் பிறகு புதிய போப்பை தேர்வு செய்வதற்கான கூட்டம் தொடங்க வேண்டும். ஆனால் கர்தினால்கள் ஒப்புக்கொண்டால் முன் கூட்டியே தொடங்கும்.

## யார் ஒரு போப்பை தேர்ந்தெடுக்க முடியும்?

80வயதிற்குட்பட்ட கர்தினால்கள் மட்டுமே புதிய போப்பை தேர்வு செய்ய முடிவும். தற்போது 80 வயதிற்குட்பட்ட 136 கர்தினால்கள் புதிய போப்பை தேர்வு செய்ய தகுதி பெற்றுள்ளனர். 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்க முடியாது. ஆனால் பொது சபைகள் என அழைக்கப்படும் போப் தேர்வுக்கு முந்தைய கூட்டங்களில் பங்கேற்கலாம்.

## ஒரு போப் தேர்ந்தெடுக்கப்பட்டால் என்ன நடக்கும்?

வாக்கெடுப்பில் வெற்றி பெற்றவுடன், புதிய போப்பிடம் நீங்கள் போப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டதை ஏற்றுக் கொள்கிறீர்களா?' என்று கேட்கப்படும். ஆமோதித்த பின்னர் போப்பாக



தனக்கு புதிய பெயர் ஒன்றை அவர் தேர்வு செய்வார். மேலும் அவருக்குரிய அதிகாரப்பூர்வ ஆடைகள் அணிவிக்கப்படுகின்றன.

கார்டினல்கள் அவருக்கு மரியாதை செலுத்தி, தங்கள் கீழ்ப்படிதலை உறுதி செய்கின்றனர்.

செயிண்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவுக்கு வெளியே கூடியிருக்கும் மக்களுக்காக ஒரு அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அதில் "habemus papam" என்ற சொற்கள் இடம் பெறும். இது லத்தீன் மொழிச் சொல், இதற்கு 'நமக்கு ஒரு போப் இருக்கிறார் என்று பொருள்.

புதிய போப்பின் பெயர் அறிவிக்கப்படுகிறது, மேலும் அவர் மூத்த கார்டினலால் பொது வெளியில் அறிமுகப்படுத்துகிறார். புதிய போப் சிறு உரையாற்றி மற்றும் பாரம்பரிய ஆசீர்வாதமான "urbi et orbi"'-யை வழங்குகிறார். இதன் லத்தீன் பொருள் 'நகரத்திற்கும் உலகிற்கும்' என்பதாகும்.

பின்னர், மாநாட்டில் ஒவ்வொரு சுற்று வாக்கெடுப்பின் முடிவுகளும் போப்பிற்குக் காட்டப்படும். பின்னர் அவை சீல் வைக்கப்பட்டு வாடிகன் ஆவணக் காப்பகத்தில் வைக்கப்படுகின்றன, இதனை போப்பின் உத்தரவின் பேரில் மட்டுமே திறக்க முடியும்.

# கிட்டு பூங்காவில் அனுர கூறியதன் பொருள்?

திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண்பது இலகுவானது. வடக்கில் இதை மையமாக வைத்து செய்யப்படும் அரசியலை விலக்கி வைக்க வேண்டும். தெற்கில் இதை மையமாக வைத்து செய்யப்படும் அரசியலை விலக்கி வைக்க வேண்டும். திஸ்ஸ விகாரையை மையமாக கொண்ட அரசியலை விலக்கி விட்டு, விகாராதிபதியும் மக்களும் சேர்ந்து பேசி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

இது கடந்த வியாழக்கிழமை கிட்டு பூங்காவில் அனுர பேசிய பேச்சின் ஒரு பகுதி. தையிட்டி விகாரையில் இருக்கும் தமிழ் அரசியலையும் சிங்கள அரசியலையும் நீக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். மிகத் தவறான ஒப்பீடு. தையிட்டி விகாரை என்பதே ஓர் அரசியல் விவகாரம் தான். அது ஓர் ஆக்கிரமிப்பு நிலப் பறிப்பு. சிங்கள பௌத்த மயமாக்கலின் ஆகப்பிந்திய நடவடிக்கைகளில் ஒன்று.

அதில் உள்ள சிங்கள பௌத்த அரசியல் தான் இங்கு பிரச்சினையே. அதற்கு எதிராகத் தான் தமிழ் மக்கள் போராடுகிறார்கள். தமிழ் மக்களுடையது ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு போராட்டம். இங்கு ஒடுக்கும் அரசியலையும் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தின் அரசியலையும் சமப்படுத்த முடியாது. ஒடுக்குமுறை இல்லையென்றால் போராட்டத்திற்கு தேவையும் இருக்காது. எனவே முதலில் நீக்க வேண்டியது அந்த விகாரையைக் கட்டிய சிங்கள பௌத்த அரசியலைத் தான்.

அதைவிடக் குறிப்பாக பிக்குகள் அந்த அரசியலின் ஒரு பகுதி. இலங்கைத் தீவின் இன ஒடுக்குமுறையில் மகா சங்கம் அரச கட்டமைப்பின் ஒரு பகுதி. எனவே ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாகக் காணப்படும் மத குருக்களிடம் தொடங்க வேண்டும். மேலிருந்து கீழ் நோக்கி அல்ல. அதாவது ஊர்களில் இருந்து தொடங்க வேண்டும். எனவே கீழிருந்து மேல் நோக்கி அதாவது ஊர்களில் இருந்து தான் தேசியவாதக் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்.



ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் காணப்படும் அசமத்துவங்கள் அதிகமாக கிராமங்களில் தான் நிலவும். பால், சாதி, சமய, பிரதேச அசமத்துவங்கள், முரண்பாடுகள் கிராமங்களில் ஆழமாக இருக்கும். எனவே அங்கேயே அவற்றைத் தீர்க்க வேண்டும். அதற்கு தேசியவாத தரிசனமும் அணுகுமுறையும் வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது என்றால் எந்த அடிப்படையில் கூட்டிக் கட்டுவது? ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில் தான் அதைச் செய்ய வேண்டும். ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில் ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது தான் தேசியவாத அரசியலைக் கட்டியெழுப்ப வேண்டும். எனவே தேசிய உணர்வைக் தான் தேர்தலில் நிற்க வேண்டும். அங்கிருந்து தொடங்கி மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தாயகம் அளவிலும் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

கிராம மட்டத்தில் பலமான கட்டமைப்புகளை அல்லது வலைப்பின்னலையோ கொண்டிராத கட்சி மாகாண மட்டத்திலோ அல்லது தாயக அளவிலோ வெற்றி பெற முடியாது. தமிழரசுக் கட்சியின் பலமே அதற்கு கிராம மட்டங்களில் இருந்த அடிமட்ட வலை பின்னல் தான். அக்கட்சி வடக்கு கிழக்கு தழுவியதாக எழுச்சி பெறவும் அது தான் காரணம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் தொகுதியில் வெற்றி பெற்ற ஒரே வேட்பாளராகிய சிறீதரனுக்கு கிளிநொச்சியில் உள்ள பலமும் அதுதான்.

எனவே கிராம மட்டத்தில் பலமான கட்டமைப்பு இல்லையென்றால் மாவட்ட, மாகாண, தாயக மட்டத்தில் கட்சிக்குள் அதற்குள்ள அதிகாரங்கள் போதாது. எனினும் இருக்கின்ற அதிகாரங்களை உச்சபட்சமாக பயன்படுத்தி எப்படி மாகாணத்தைக் கட்டியெழுப்பலாம் என்பது தொடர்பில் பொருத்தமான பொருளாதார தரிசனங்கள் தமிழ்க் கட்சிகளிடம் குறைவு.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



அதேசமயம் மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு மாகாண சபையில் இன அழிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை மகத்தானது. அத்தீர்மானத்துக்கு மக்கள் ஆணை உண்டு. தேச நிர்மாணம் என்பது அதாவது தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது அதன் பொருளாதார அர்த்தத்தில் தமிழ்த் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தான்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் உள்ளூராட்சி சபை மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் மாகாண சபை மட்டத்திலும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நிகழ்ச்சி நிரல் இருக்க வேண்டும். உள்ளூராட்சி சபைகளில் இனப் பிரச்சினையை பேசக் கூடாது என்பது தையிட்டி விகாரையில் இருந்து இன அரசியலை அகற்றுவோம் என்று கூறும் அனுரவின் கோரிக்கைக்கு நிகரானது. அது ஒடுக்குமுறையின் ஒரு பகுதி.



போய் பேசித் தீருங்கள் என்று கூறுவதே ஒடுக்கு முறை தான். எனவே தையிட்டி விகாரை விடயத்தில் அதன் அரசியலை நீக்க வேண்டும் என்று அனுர கேட்பதே அரசியல் தான். ஒடுக்கும் அரசியல் தான்.

அப்படித்தான் அவருடைய யாழ்.மாநகர சபைக்கான பிரதான வேட்பாளர் கூறுகிறார், தான் அரசியல் கதைப்பதை விடவும் அபிவிருத்தியைத் தான் கவனிக்கப் போவதாக. ஆனால் அரசியல் இல்லாமல் அபிவிருத்தி இல்லை. எதை அபிவிருத்தி செய்வது? எங்கே செய்வது? எப்படிச் செய்வது? எப்பொழுது செய்வது? யாரை வைத்துச் செய்வது? போன்ற எல்லாமே அரசியல் தீர்மானங்கள் தான். அபிவிருத்தி என்பது அரசியலின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி. இந்த அடிப்படை விளக்கம் வேட்பாளரிடம் இல்லையா? அல்லது அபிவிருத்திக்குள் இருந்து அரசியலை நீக்கும் அரசியலை அவர் வேண்டுமென்று செய்கிறாரா?

அதே போல தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் களம் தொடர்பாக ஒரு கோட்பாட்டு விடயம் சுட்டிக்காட்டப்படுகிறது. உள்ளூராட்சி சபைகள் உள்ளூருக்கானவை உள்ளூர் உணர்வுகளைப் பிரதிபலிப்பை உள்ளூர் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான பயில் களங்கள். எனவே அந்த சபைகளுக்கான தேர்தல் களங்களிலும் தமிழ்த் தேசிய அரசியலைப் பேசக்கூடாது என்று ஒரு விளக்கம்.

அப்படிச் சொல்பவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை விளங்கிக் கொள்ளவில்லை. தேசியவாத அரசியல் என்றால் என்ன? ஒரு மக்கள் கூட்டத்தை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது. அதை எங்கிருந்து தொடங்க வேண்டும்? கீழிருந்து மேல் நோக்கித் தான் அதைத் கட்டியெழுப்புவது என்ற விடயத்தை ஊர்களில் இருந்தே, ஊராட்சி அரசியல் களத்தில் இருந்தே தொடங்க வேண்டும்.

ஊரில் சாதிமானாக இருப்பவர் சமய வெறியராக இருப்பவர், பால் அசமத்துவத்தை ஆதரிப்பவர் போன்றவர்களை தேர்தலில் நிறுத்தி உள்ளூராட்சி சபைகளை உருவாக்க முடியாது. ஊருக்கு நல்லவர் அல்லது சாதிக்கு நல்லவர் அல்லது சமயத்துக்கு நல்லவர் தேசியவாதியாக இருப்பார் என்று இல்லை. உள்ளூராட்சி சபைகள் உள்ளூர்த் தன்மை மிக்கவை என்றாலும் உள்ளூரில் இருக்கக்கூடிய அசமத்துவங்களை தேசியவாத நோக்கு நிலையில் கடக்கின்ற, நீக்குகின்ற ஒருவர் தான் உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

எனவே வேட்பாளர்களைத் தெரியும் போது தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்தே அதைச் செய்ய வேண்டும். இப்படிப் பார்த்தால் தேசியவாத அரசியலை கிராமங்களில் இருந்து தான் கட்டியெழுப்ப வேண்டும். எனவே உள்ளூராட்சி சபை தேர்தல்கள் அதற்குரியவை தான். உள்ளூர் உணர்வுகளை பிரதிபலிப்பது என்பது தமிழ்த் தேசிய உணர்வுக்கு எதிராக இருக்க முடியாது.அது தமிழ்த் தேசிய கூட்டுணர்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்

உள்ளூர் அபிவிருத்தி தொடர்பான பொருத்தமான தரிசனங்களை கொண்டவர்களும், அதேசமயம் உள்ளூர் அசமத்துவங்களை நீக்கி ஊர் மட்டத்தில் தேசிய ஐக்கியத்தை,தேசியக் கூட்டுணர்வைக் கட்டியெழுப்பக் கூடியவர்களுந் யைப் பலப்படுத்த முடியாது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுடைய ஒவ்வொரு அரசியல் அசைவும் தம்மைத் தேசமாகத் திரட்டும் நோக்கத்தைக் கொண்டதாகவே இருக்க வேண்டும். அதை குடும்பத்தில் இருந்தே தொடங்க வேண்டும். நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரு குடும்பத்திலேயே வாக்குகள் சிதறி விழுந்தன. தமிழ் மக்கள் ஒரு சமூகமாகச் சிதறுகிறார்கள். எனவே ஊர்களில் இருந்தே தேசத்தைக் கட்டியெழுப்பத் தொடங்க வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளில் மட்டுமல்ல மாகாண சபைகளிலும் இனப்பிரச்சினையை அதிகம் விவாதிக்கக் கூடாது என்ற ஒரு விவாதம் விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த பொழுது எழுந்தது. வட மாகாண சபையில் அபிவிருத்தித் திட்டங்களை விடவும் இனப் பிரச்சினை அரசியல் தான் அதிகமாக பேசப்பட்டது என்ற ஒரு குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது.

விக்னேஸ்வரனிடமும் வடமாகாண சபையிடமும் தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலான பொருத்தமான பொருளாதார தரிசனங்கள் இருக்கவில்லை என்பது உண்மை. ஆனால் அதற்காக மாகாண சபை மட்டத்தில் இனப் பிரச்சினையைப் பேசக்கூடாது என்று கூறுவது தமிழ் அரசியலை தமிழ்த் தேசிய நீக்கம் செய்யும் நோக்கத்தைக் கொண்டது.

மாகாண சபை எனப்படுவது மக்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு சட்ட மன்றம். ஒற்றையாட்சிக்கு கட்டமைப்புக்குள் ...

தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான கோஷம் வெற்றி நமதே ஊரும் எமதே என்பதாகும். உள்ளூராட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றியை அடுத்த கட்டத்திற்கு விஸ்தரிப்பது தான் அவர்களுடைய நோக்கம். நாடாளுமன்றத் தேர்தல்களில் அவர்கள் பெற்ற வெற்றியானது தமிழ்த்தேசிய கட்சிகளைத் தோற்கடிக்கலாம் என்ற நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. இப்பொழுது தமிழ்த் தரப்பு எனப்படுவது தமிழ்த் தேசியத் தரப்பு மட்டும் அல்ல என்பதனை அவர்கள் அழுத்தமாக டில்லியிலும் ஜநாவிலும் கூறத் தொடங்கி விட்டார்கள்.

உள்ளூராட்சி சபைகளிலும் அந்த வெற்றியை அவர்கள் ஸ்தாபிப்பார்களாக இருந்தால் அதாவது ஊரும் அவர்களிடம் போய் விட்டால் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாக் தேசிய இனமாகக் கருதவில்லை என்று கூறத் தொடங்கி விடுவார்கள்.

எனவே உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் தமிழ் மக்கள் மிகத்தெளிவான முடிவை எடுக்க வேண்டும். தாங்கள் ஒரு தேசமா? இல்லையா? என்று. அது உள்ளூர்த் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு தேர்தல் தான். உள்ளூர் உணர்வுகளை பிரதிபலிக்கும் ஒரு தேர்தல் தான். அதை விட ஆழமான பொருளில் அது தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலின் ஒரு பகுதி.

# டொனால்ட் ட்ரம்ப் 3வது தடவையும் ஜனாதிபதியாக பதவியில் இருக்க முடியுமா?

78 வயதான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மூனாறாவது பதவிக் காலத்துக்கும் ஜனாதிபதியாக இருப்பது குறித்து சிந்திப்பதாக மார்ச் 30 ஆம் திகதி கூறினார். தான் பகிடி விடுவதாக நினைக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். சட்டங்களில் உள்ள ஓட்டைகளை பயன் படுத்தி மூன்றாவது பதவிக் காலத்துக்கும் ஜனாதிபதியாக தன்னால் இருக்கக் கூடியது சாத்தியம் என்றும் அவர் மேலும் கூறினார்.

**அமெரிக்க அரசியலமைப்பு அனுமதிக்குமா?**

அமெரிக்க ஜனாதிபதிகள் இரு பதவிக் காலங்களுக்கு தெரிவாவதை மட்டுப் படுத்தும் அரசியலயைப்புக்கான 22 வது திருத்தம் 1951 பெப்ரவரி 27 அங்கீகரிக்கப்பட்டது. அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் இரு பதவிக்காலங்களுக்கு ஜனாதிபதியாக இருந்த பிறகு மூன்றாவது பதவிக் காலத்துக்கு செல்வதை 1796 ஆம் ஆண்டில் தானாகவே மறுத்தார். அவர் வகுத்த எழுதப்படாத இரு பதவிக் கால முன்னுதாரணத்தை மீறி பிராங்ளின் ரூஸ்வெல்ற் நான்கு பதவிக் காலங்களுக்கு (1933 – 1945) ஜனாதிபதியாக பதவி வகித்ததை அடுத்தே அந்த அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது.

எவரும் இரு தடவைகளுக்கு மேலாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதை தடுக்கும் அந்த திருத்தம் எவராவது இன்னொரு ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் இரு வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் ஜனாதிபதியாக பதவி வகித்தால் ( உதாரணமாக. ஜனாதிபதி ஒருவர் மரணமடைந்தால் அல்லது பதவி விலகினால் துணை ஜனாதிபதி ஜனாதிபதியாக பதவியேற்பதை போன்று) அவர்கள் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதை மாத்திரம் அனுமதிக்கிறது. அதன் வாயிலாக அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் கூடுதல் பட்ச பதவிக்காலம் பத்து வருடங்களாக (முதலில் பதவியில் இருந்தவரின் பதவிக் காலத்தின் இரு வருடங்களும் முழுமையான இரு பதவிக்காலங்களின் எட்டு வருடங்களும் சேர்த்து) இருக்க முடியும்.

டொனால்ட் ட்ரம்ப் 2016 , 2024 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர். அடுத்தடுத்து தெரிவு செய்யப்படா விட்டாலும் அவரது இரு பதவிக் காலங்களுக்கு ( 2017 – 2021. 2025 – 2029) தெரிவு செய்யப்பட்டவர் என்பதால் மூனறாவது பதவிக்காலத்துக்கு செல்வதை 22 அரசியலமைப்பு திருத்தம் எந்த ஐயப்பாட்டுக்கும் இடமில்லாத வகையில் தடைசெய்கிறது.

**சட்டத்தில் ஓட்டை?**

22 திருத்தம் நிலைமையை தெளிவாக விளக்குகின்ற போதிலும் சட்ட நியதியை தவிர்த்துச் சுற்றிவளைத்துச் செல்வதற்கு ட்ரம்ப் இரு வழிகளைக் கூறுகிறார். அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி தேர்தல் 2028 ஆம் ஆண்டில் நடைபெறும்.

அப்போது தற்போதைய துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸை போட்டியிட வைத்து அவரின் துணை ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்ப் நிற்பது ஒரு யோசனை. வான்ஸ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்க அனுமதிப்பதற்கு அவர் பதவியை துறந்து வழிவிடவேண்டும்.

ஆனால் இந்த தந்திரோபாயத்தை அரசியலமைப்புக்கான 12வது திருத்தம் தடுக்கிறது. அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதியாக பதவிக்கு வருவதற்கு தகுதி இல்லாத எவரும் அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக வருவதற்கு தகுதி இல்லாதவராகிறார் என்று அந்த திருத்தம் கூறுகிறது. ட்ரம்ப் இன்னொரு பதவிக் காலத்துக்கு ஜனாதிபதியாக தெரிவாவதை 22வது திருத்தம் தடை செய்வதால் அவரால் துணை ஜனாதிபதியாகவும் வரமுடியாது.



துணை ஜனாதிபதியை பயன்படுத்துகின்ற மார்க்கம் தடைப் படுகின்ற அதேவேளை. அடுத்தடுத்து பதவிக்கு வருவதற்கு இருக்கின்ற இன்னொரு கோட்பாட்டு ரீதியான பாதையை அமெரிக்காவின் ஒரு அரசியல் விஞ்ஞானப் பேராசிரியரான புரூஸ் ஜி. பீபொடி தனது ஆய்வு அறிக்கை ஒன்றில் விளக்கியிருக்கிறார்.

22வது அரசியலமைப்பு திருத்தம் ஒருவர் இரு தடவைகளுக்கு மேலாக ஜனாதிபதியாக தெரிவாவதை (Elected) தடுக்கிறது. ஆனால் இரு பதவிக்காலங்களுக்கு அப்பால் பதவியில் இருப்பதை (Serving) அது தடுக்கவில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால். இரு தடவைகள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஒருவர் இன்னொருவருக்குப் பதிலாக (Line of succession) பதவிக்கு வருவதன் மூலம் அமெரிக்க ஜனாதிபதியாக முடியும்.

அமெரிக்க காங்கிரஸின் ஜனப்பிரதிநிதிகள் சபையின் சபாநாயகராக உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்படுபவர் காங்கிரஸின் ஒரு உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ட்ரம்ப் அவ்வாறாக சபாநாயகராக தெரிவாக முடிந்தால். (ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் பதவியில் இருந்து விலகும் பட்சத்தில் ) மீண்டும் ஜனாதிபதியாக வரமுடியும் என்று பேராசிரியர் பீபொடி கூறுகிறார்.

22 வது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்வது மூன்றாவது பாதை அது பெரிதும் சாத்தியமில்லை. அந்த திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டுமானால் காங்கிரஸின் இரு சபைகளிலும் (ஜனப்பிரதிநிதிகள் சபையும் செனட்சபையும்) மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை அல்லது அரசியலமைப்பு பேரவையை (Constitutional convention) கூட்ட வேண்டும்.

அந்த செயன்முறை ஒரு போதும் பயன்படுத்தவில்லை. அரசியலமைப்பு பேரவையை கூட்டி 22வது திருத்தத்தை இரத்துச் செய்வதானால் 50 மாநில சட்டசபைகளின் மூன்றில் இரண்டு சபைகளின் (34) ஆதரவும் அடுத்து நான்கில் மூன்று சபைகளின் (38) அங்கீகாரமும் தேவை. அமெரிக்காவின் தற்போதைய அரசியல் கோலங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை ட்ரம்ப் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கான (கடந்த 33 வருடங்களாக அவ்வாறு செய்யப்படவில்லை) சாத்தியப்பாடு அறவே கிடையாது.

**பதவிக் காலத்தை நீடித்த தலைவர்கள்**

உலகம் பூராவும் பல தலைவர்கள் மிகவும் சாதுரியமான முறையில் அரசியலமைப்பு மட்டுப்பாடுகளை மாற்றியமைத்து திருக்கிறார்கள். உதாரணமாக. விளாடிமீர் புட்டின் ரஷ்யாவின் ஜனாதிபதியாக இரு பதவிக்காலங்களுக்கு பிறகு (2000 --2008) 1993 ஆண்டின் அரசியலமைப்பின் 81(3) சரத்தின் கீழ் தொடர்ச்சியான `இரு பதவிக்கால மட்டுப்பாட்டு எல்லையை அடைந்தார்.

பிறகு அந்த எல்லையை சட்ட நியதிகளை தவிர்த்து சுற்றி வளைப்பதற்காக அவர் (2008 – 2012) பிரதமரானார். அவரின் நேச அணியான டிமிட்ரி மெட்வெடேவ் ஜனாதிபதியாகி முன்னர் இருந்த நான்கு வருட பதவிக் காலத்தை ஆறு வருடங்களாக நீடித்தார்.



2012 ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் மீண்டும் ஜனாதிபதியாக வந்த புட்டின் அவருக்கு விசுவாசமான பாராளுமன்றத்தினதும் (Lkh) நீதித்துறையினதும் ஆதரவுடன் 2020 ஆண்டு கொண்டுவந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமாக பதவிக் காலங்களின் எண்ணிக்கையை மாற்றியமைத்தார். அதன் மூலமாக அவர் 2036 ஆம் ஆண்டுவரை ஜனாதிபதி பதவியில் அவரால் தொடரமுடியும்.

துருக்கியில் பிரதமராக இருந்த ரிசெப் தயிப் எர்டோகான் (2003 – 2014) ஜனாதிபதியாக வந்து 2007 ஆம் ஆண்டில் நடத்திய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக ஜனாதிபதியின் பதவிக்கால மட்டுப்பாட்டை இல்லாமல் செய்ததுடன் துருக்கியின் ஆட்சிமுறையை ஜனாதிபதி ஆட்சி முறையாக மாற்றியமைத்தார்.

அதே போன்றே சீனாவிலும் சி ஜின்பிங் ஜனாதிபதியின் இரு பதவிக்கால மட்டுப்பாட்டை 2018 ஆம் ஆண்டில் இல்லாமல் செய்தார். இந்த மாற்றம் அவர் காலவரையறையின்றி சீனாவை ஆட்சி செய்வதற்கு அவரை அனுமதித்தது.

அதன் மூலமாக அவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அரசு மீதான தனது பிடியை பலப்படுத்திக் கொண்டார்.

அதேவேளை சால தலைவர்கள் சட்டங்களை மாற்றி எழுதாமலேயே பல வருடங்கள் ஆட்சி செய்கிறார்கள். ஜேர்மனியில் அதிபர்களுக்கு (Chancellors) பதவிக்கால மட்டுப்பாடு இல்லை. ஆனால். தொடர்ச்சியாக பல பதவிக் காலங்களுக்கு ஆட்சியில் இருப்பதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவு தேவை.

அஞ்ஜெலா மெர்கெல் 16 வருடங்கள் ஜேர்மனியின் அதிபராக பதவியில் இருந்தார். அதேபோன்றே கனடாவிலும் பிரிட்டனிலும் பிரதமர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பதவிக் காலங்கள் கிடையாது. அவர்கள் தங்களது கட்சியின் நம்பிக்கையை தக்கவைக்க முடியுமானால் காலவரையறையின்றி பதவியில் தொடர முடியும்.

**இந்தியப் பிரதமர்**

அமெரிக்க ஜனாதிபதி ஆட்சிக் கட்டமைப்பைப் போலன்றி இந்திய பாராளுமன்ற ஆட்சிமுறை பிரதமருக்கு பதவிக்கால மட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. அவரின் பதவிக்காலங்கள் ( அரசியலமைப்பின் 75 (3) சரத்தின் பிரகாரம் லோக்சபாவின் நம்பிக்கையை தொடர்ந்து தக்க வைப்பதில் தங்கியிருக்கிறது.

இது முறைமை வாக்காளர்களின் இறைமை. ஜனநாயக நெகிழ்ச்சி மற்றும் பாராளுமன்ற பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிசெய்வதுடன் மக்களின் நம்பிக்கையை தொடர்ந்து தக்கவைக்கக் கூடிய தலைவர்கள் நீண்ட காலத்துக்கு பதவியில் இருப்பதை அனுமதிக்கிறது.

உதாரணமாக தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி 2029ஆம் ஆண்டு வரை (15 வருடங்கள்) பதவியில் இருக்க முடியும். ஆனால். நம்பிக்கையில்லாப் பிரேரணை போன்ற ஏற்பாடுகளையும் இந்த முறைமை உள்ளடக்கியிருக்கிறது. அது வரலாற்றில் வி.பி.சிங்.(1990). எச்.டி. தேவகௌடா ( 1997). அடல் பிஹாரி வாஜ்பாய் (1999) போன்ற பிரதமர்களின் பதவிக் காலங்களை முடிவுக்கு கொண்டு வந்தது. மேலும். கிரமமான தேர்தல்கள். கூட்டணி அரசியல். பாராளுமன்ற விவாதங்கள் நீதித்துறையின் மேற்பார்வை மற்றும் சுதந்திரமான பத்திரிகைத்துறை ஆகியவை துடிப்புமிக்க ஒரு ஜனநாயக சமநிலையை உறுதிசெய்கின்றன. (தி இந்து)

# NPPக்கு எதிரான தமிழ்த்தேசியக் கட்சிகளின் வியூகம் என்ன?

கிளிநொச்சியில் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகிய சிறீதரன் ஆற்றிய உரை ஒன்றைப் பார்த்தேன். அதில் அவர் ஒரு பெண் வேட்பாளரின் பெயரை விழித்து ஒரு விடயத்தை



சொல்கிறார். அப்பெண் வேட்பாளர் தனக்கு நம்பிக்கையான ஒருவரிடம் கேட்டிருக்கிறார், இந்தத் தேர்தலில் நாங்கள் வென்றால் அந்த வெற்றி கட்சியின் செயலாளர் என்ற அடிப்படையில் சுமந்திரனுக்கும் சேரும் தானே? என்ற பொருள்பட.

அவர் அவ்வாறு கேட்டதன் அர்த்தம் என்ன? உள்ளூராட்சி சபையில் தாங்கள் பெறக்கூடிய வெற்றி என்பது சுமந்திரனைப் பலப்படுத்தும் என்ற சந்தேகம் அல்லது பயம் அவருக்கு உண்டு என்று அர்த்தம். ஒரு கட்சியின் உள்ளூராட்சி சபை வேட்பாளர் அந்த கட்சிக்கு கிடைக்கும் வெற்றி அந்தக் கட்சியின் செயலாளரை பலப்படுத்தி விடக் கூடாது என்று பயப்படுகிறார் என்றால் அதன் பொருள் என்ன?

கட்சி இரண்டாக நிற்கிறது என்று பொருள். அதை அந்த மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் பகிரங்கமாகக் கூறுகிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் தொகுதியில் அவர் மட்டும் தான் வெற்றி பெற்றார். குடாநாட்டில் தமிழரசுக் கட்சிக்கு ஒரு ஆசனம் கூட கிடைக்கவில்லை. அவ்வாறு வெற்றி பெற்ற ஒரே நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரன் மேற்கண்டவாறு கதைக்கிறார் என்றால் அந்தக் கட்சி எங்கே நிற்கிறது?

உள்ளதில் பெரிய கட்சி. பாரம்பரியமான ஒரு கட்சி. குறிப்பாக வடக்கு கிழக்கில் கிராம மட்டத்தில் ஒப்பீட்டளவில் பலமான ஒரு வலைப்பின்னலைக் கொண்டிருக்கும் கட்சி. அந்தக் கட்சியின் வேட்பாளர் ஒருவரே அப்படிச் சந்தேகப்படுகிறார் என்றால், தமிழ்த் தேசிய அரசியலின் நிலை என்ன?

இவ்வாறு தமிழ்த் தேசிய அரசியலில் உள்ள பெரிய கட்சி தனக்குள் இரண்டாகி நிற்கும் போது அது எப்படி ஏனைய கட்சிகளோடு இணையும்? தமிழரசுக் கட்சிக்கு அடுத்தபடியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒப்பீட்டளவில் ஒரு பெரிய கூட்டை உருவாக்கியிருக்கிறது. இக்கூட்டானது தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்குமா? சங்குக் கூட்டணி முன்னுரை விட இப்பொழுது பலவீனமாகக் காணப்படுகிறது. முன்பு அக்கூட்டோடு காணப்பட்ட கட்சிகள் சில அங்கிருந்து விலகி சைக்கிள் கூட்டுக்குள் இணைந்து விட்டன. இந்தக் கூட்டுகளுக்குள் வராத விக்னேஸ்வரனின் கட்சியும் உண்டு. ஆக மொத்தம் தமிழ்த் தேசியப் பரப்பில் நான்கு தரப்புகள் காணப்படுகின்றன.

ஆனால் தமிழ்த் தேசியத் தரப்பை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் எதிர்பாராத விதமாக தோற்கடித்த தேசிய மக்கள் சக்தியானது ஒரே ஒரு தரப்பாக, ஆளுங்கட்சியாக அரச பலத்துடன் களத்தில் நிற்கின்றது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அவர்களுக்கு கிடைத்த வெற்றிகள் எதிர்பாராமல் கிடைத்தவை. ஆனால் உள்ளூராட்சி சபைகளில் அவர்கள் வெற்றிகளை எதிர்பார்த்து வியூகம் அமைத்து வேலை செய்கிறார்கள்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் எவையும் மாபெரும் பொதுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தவில்லை. காசு இல்லை என்பது மட்டும் ஒரு காரணம் அல்ல.கட்சிகள் மத்தியில் தேர்தலை நோக்கிய எழுச்சி காணப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான தமிழ் அரசியல் சூழலானது பிரமாண்டமானதாக, நம்பிக்கையூட்டத்தக்கதாக மாற்றத்தைக் காட்டுவதாக இருக்கவில்லை. பல கட்சிகள்பல கூட்டுக்கள் பல சுயேட்சைகள்... இவ்வாறாக தமிழ் வாக்குகள் பலவாகச் சிதறின. அதுவும் உற்சாகக் குறைவுக்கு ஒரு காரணம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரிய கூட்டங்களை ஒழுங்குபடுத்தத் தவறிய ஒரு பின்னணியில், தேசிய மக்கள் சக்தியானது பெரிய கூட்டங்களை ஒழுங்குபடுத்தியது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பாசையூரில் ஒரு கூட்டத்தை ஒழுங்குபடுத்தியது.

வழமையாக தமிழ்த் தேசியக் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் தங்கள் பெருங் கூட்டங்களை கிட்டு பூங்காவிலோ அல்லது முத்தவெளியிலோ வைப்பதுண்டு. ஆனால் விதி விலக்காக தேசிய மக்கள் சக்தியானது ஒதுக்குப்புற கரையோரக் கிராமமாகிய பாசையூரில் பெருங் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியது. கரையோரப் பகுதி வாக்காளர்களைக் கவர்வது அவர்களுடைய நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

வழமையாக கரையோரப் பகுதியில் உள்ள கத்தோலிக்க மக்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்ற விடயத்தில் திருச்சபை மதகுருக்கள் கூடுதலான செல்வாக்கைச் செலுத்துவதுண்டு. ஆனால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருச்சபையில் ஒரு பகுதியினர் அனுரவை எதிர்பார்ப்போடும் ஆர்வத்தோடும் பார்க்கத் தொடங்கினர்.

இதன் காரணமாக கரையோரக் கிராம மக்கள் யாருக்கு வாக்களிக்கக்கூடும் என்பதனை அனுமானிக்க முடியாமல் இருந்தது. தேர்தலுக்குப் பின்,சிவில் சமூகச் செயற்பாடுகளில் அதிகமாக ஈடுபடுகின்ற ஒரு கத்தோலிக்க மத குருவிடம் அது தொடர்பாக நான் கேட்டபோது, அவர் சொன்னார்.. ஓம் இந்த முறை எங்களால் நமது மக்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பதனை சரியாக மதிப்பிட முடியவில்லைத் தான் என்று.

விளைவாக தேசிய மக்கள் சக்திக்கு எதிர்பாராத வெற்றி கிடைத்தது. அந்த எதிர்பாராத வெற்றியை இப்பொழுது அடுத்தடுத்த கட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு பேசிய மக்கள் சக்தி உற்சாகமாக உழைக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றிகளால் தமிழ்த் தேசியக் கட்சிகளைத் தோற்கடிக்கலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதனால் நாடாளுமன்றத் தேர்தலை போலவே உள்ளூராட்சி சபை தேர்தலை நோக்கியும் அவர்கள் பெரும் கூட்டங்களை தமிழ்ப் பகுதிகளில் ஒழுங்கு படுத்துகிறார்கள். அரச பிரதானிகள் வடக்கு கிழக்குக்கு அதிகரித்த அளவில் வருகை தருகிறார்கள். அரச வைபவங்கள் தேர்தல் பிரச்சார நோக்கத்தோடு பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. அரச வளங்களும் தேர்தலை நோக்கித் திருப்பப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் உண்டு. குறிப்பாக மத வைபவங்களையும் மதத்தலங்களையும் அரச பிரதானிகள் வாக்காளர்களை கவர்வதற்கான களங்களாகப் பயன்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

அண்மையில் மாவிட்டபுரம் கந்த சாமி கோயில் கும்பாபிஷேகம் நடந்த பொழுது அங்கே பிரதமர் ஹரிணி விருந்தினராக வரவழைக்கப்பட்டார். அதே காலப்பகுதியில் பலாலி வீதியில் அது வரை திறக்கப்படாத பகுதி திறக்கப்பட்டது. இப்பாதை திறப்பு வைபவம் தேர்தல் நோக்கத்தைக் கொண்டதா என்று கொழும்பில் உள்ள நீதிக்கும் அபிவிருத்திக்குமான மையத்தின் பணிப்பாளராகிய சட்டச் செயற்பாட்டாளர் ரட்னவேல் கேட்டிருக்கிறார்.

ஆளுங்கட்சி என்ற வசதி காரணமாக, அரச வைபவங்களையும் திணைக்களக் கூட்டங்களையும் அரசு நிகழ்வுகளையும் மறைமுகமாகப் பிரச்சார நோக்கத்தோடு பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளை தேசிய மக்கள் சக்தி கொண்டிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற பிரதேச சபைகளுக்கு தடையின்றி நிதி உதவி செய்வோம் என்று அனுர மன்னாரில் கூட்டத்தில் பேசும் போது கூறியுள்ளார். அப்படியென்றால் தேசிய மக்கள் சக்தி அல்லாத வேறு கட்சிகள் வெற்றி பெறும் பிரதேச சபைகளுக்கு அரச உதவிகள் உடனடியாக கிடைக்காது என்று பொருளா? அரசாங்கம் தேர்தல் விதிமுறைகளை மீறுவதாக சுமந்திரன் உட்பட தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதானிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியானது தமிழ் மக்கள் மத்தியில் அனுரவை ஒரு கதாநாயக பிம்பமாக கட்டியெழுப்பும் நோக்கத்தோடு உற்சாகமாக உழைத்து வருகின்றது. கடந்த வியாழக்கிழமை கிட்டு பூங்காவில் நடந்த பெருங் கூட்டத்தில் போலீசாரின் தடுப்புகளை மீறி பொது மக்கள் மத்தியில் இருந்து அனுரவை நோக்கி ஆர்வத்தோடு கைகள் நீண்டன. அவரோடு கை குலுக்கவும் அவரோடு தன் படம் எடுப்பதற்கும் ஒரு பகுதி இளையோர் ஆர்வமாக காணப்படுகிறார்கள்.


அது செயற்கையாக திட்டமிட்டு அழைத்து வரப்பட்ட ஒரு கூட்டம் அல்ல. இயல்பாக வந்த ஒரு கூட்டம். அவர்களில் பலர் அரசியல் விழிப் போடும் மாற்றத்தின் மீது கொண்ட தாகத்தினாலும் அவ்வாறு அனுரவோடு கைகுலுக்க வரவில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் கைபேசி கலாச்சாரத்தின் பிரதிநிதிகள் கைபேசிச் செயலிகளின் கைதிகள். பிரபல்யமானவரோடு அல்லது அதிகாரத்தில் இருப்பவரோடு சேர்ந்து தன்படம் எடுப்பது அல்லது அவரோடு கைகுலுக்கி படம் எடுப்பது, அதைச் செயலிகளில் பரப்பி அதன் மூலம் தன்னைப் பிரபல்யப்படுத்துவது. கைபேசிச் செயலி கலாச்சாரம் எனப்படுவது மனிதர்களின் தன்மோகத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. புத்திசாலித்தனத்திற்கும் மந்தமானதுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் ஆழமாக்கியிருக்கிறது. இப்படிப்பட்டதோர் தொழில் நுட்ப அரசியல் சூழலில் ரிக்ரொக் தலைமுறையின் இளையவர்கள் அனுரவோடு படமெடுப்பதற்கும் கைகுலுக்குவதற்கும் ஆர்வமாகக் காணப்படுகிறார்கள்.

இவர்களில் ஒரு பகுதியினர் ஏற்கனவே அர்ஜுனாவை ஆர்வத்தோடு பார்க்கின்றார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அர்ஜுனாவுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் விழுந்த வாக்குகள் இரண்டு விடயங்களைத் தெளிவாகக் காட்டின ஒன்று, தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் மீது வெறுப்படைந்திருக்கிறார்கள். இரண்டு, அவர்கள் மாற்றத்தைக் கேட்கிறார்கள். தமிழ்த் தேசியக் கட்சிகளால் அந்த மாற்றத்தைக் காட்ட முடியவில்லை. அதனால்தான் கைபேசி செயலிகளால் உருப்பெருக்கப்பட்ட அர்ஜுனாவை ஒரு பகுதியினர் எதிர்பார்ப்போடு தேர்ந்தெடுத்தார்கள். இன்னொரு பகுதியினர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள்.

அதே அரசியல் சூழல் தான், அதே தொழில்நுட்பச் சூழல் தான் இப்பொழுதும் நிலவுகின்றது. அதே தமிழ் கட்சிகள்தான் அதே ஆளை

(22ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120777** F
30yrs, 5'2" , Single , Swaathi , 9 Sevai , Diploma , Lab Tech , Canada

**ID08120684** F
27yrs, 5'4" , Single , Rohini , 2 Sevai , Bachelors.. , Health , Canada

**ID08120662** F
32yrs, 5'2" , Single , Pooraadam , 11 Sevai Bachelors.. , Product Management , Canada

**ID08120644** F
29yrs, 5'7" , Single , Visaakam , 12 Sevai , Bachelors.. , Business Analyst.. , Canada

**ID08120640** F
29yrs, 5'4" , Single , Kettai , 2 Sevai , Postgraduate.. , Social Media.. , Canada

**ID08120637** F
31yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Analyst , Canada

**ID08120633** F
38yrs, 5'2" , Single , Avittam , 2 Sevai , High School , District manager , Canada

**ID08120036** F
32yrs, 5'2" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Masters Degree , Academic Advisor , Canada

**ID08119986** F
37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08119978** F
28yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , Bachelors.. , Manager Hospitality.. , Canada

**ID08119833** F
32yrs, 5'4" , Single , Aayilyam , 5 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08120630** F
31yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08119986** F
37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08120771** F
29yrs, 5'5" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , Software engineer , Sri Lanka

**ID08120696** F
30yrs, 5'1" , Single , Thiruvonam , N/A Sevai , Masters Degree , Clinical Research.. , Canada

**ID08120686** F
32yrs, 5'3" , Single , Swaathi , 2 Sevai , Postgraduate.. , Montessori.. , United States

**ID08120681** F
28yrs, 5'3" , Single , Mrigasheersham , 2 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120676** F
26yrs, 5'3" , Single , Chithirai , 4 Sevai , Bachelors.. , Program Coordinator , Canada

**ID08120581** F
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 6 Sevai , Ph.D , Senior Engineer , United States

**ID08120809** F
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120808** F
31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Acadamic Staff , Sri Lanka

**ID08120807** F
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120806** F
27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120805** F
30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120804** F
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120803** F
21yrs, 4'10" , Single , Not Specified , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120802** F
19yrs, 5'4" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Bachelors.. , MSc intended.. , Canada

**ID08120799** F
45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120795** F
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120794** F
24yrs, 5'4" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Dental Assistant , Canada

## மணமகன்



**ID08120717** M
33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08120715** M
27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120709** M
38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120673** M
35yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642** M
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120642** M
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616** M
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613** M
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Canada

**ID08120335** M
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08117127** M
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686** M
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120801** M
69yrs, 5'10" , Divorced , Visaakam , N/A Sevai , Diploma , Security Officer , Canada

**ID08120751** M
33yrs, 5'7" , Single , Thiruvonam , 11 Sevai , Bachelors.. , General practitioner , United Kingdom

**ID08120694** M
39yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120690** M
40yrs, 5'6" , Single , Swaathi , N/A Sevai , High School , Building Construction , Sri Lanka

**ID08120670** M
30yrs, 5'11" , Single , Poosam , 12 Sevai , Diploma , Team leader , Canada

**ID08120639** M
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120474** M
28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08120797** M
32yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , IT Consultant , Sri Lanka

**ID08120796** M
30yrs, 5'7" , Divorced , Thiruvonam , 8 Sevai , High School , Truck Driver , Canada

**ID08120793** M
25yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

**ID08120790** M
21yrs, 4' , Single , Not Specified , N/A Sevai , High School , Casc , Anguilla

**ID08120789** M
35yrs, 6'1" , Single , Rohini , N/A Sevai , High School , Tba , Canada

**ID08120788** M
22yrs, 5'4" , Single , Rohini , N/A Sevai , High School , Phone shop , Sri Lanka

**ID08120787** M
33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical rep , Sri Lanka

**ID08120786** M
36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120785** M
52yrs, 5'9" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Optician , Sri Lanka

**ID08120782** M
30yrs, 6'2" , Single , Rohini , N/A Sevai , Bachelors.. , Electrical.. , Sri Lanka

**ID08120779** M
35yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Company Forklift.. , Canada

**ID08120773** M
46yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Elecerician.. , Sri Lanka

# எதிர்காலத்தை உள்ளூராட்சி தேர்தல்களுக்கு பயணம் வைத்திருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள்

இலங்கை அரசியல் வரலாற்றில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் முன்னென்றும் இல்லாத வகையில் அவற்றின் எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக சிங்கள தலைமைத்துவத்தைக் கொண்ட தேசிய கட்சி ஒன்றுக்கு எதிராக மிகவும் உக்கிரமான பிரச்சாரங்களை முன்னெடுக்கின்ற ஒரு தேர்தலாக எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல்கள் அமைந்திருக்கின்றன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில வாரங்களுக்கு முன்னர் 'தி இந்து' பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா ஸ்ரீனிவாசனுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும் போது தமிழ்க்கட்சிகள் 'அனர்த்தத்தை' தவிர்ப்பதற்காக விவேகத்துடன் முகங்கொடுக்க ஒரு அரசியல் சமராக உள்ளூராட்சி தேர்தல்கள் விளங்குகின்றன.

2024 நவம்பர் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் ஆளும் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களை கைப்பற்றிய தன் மூலம் படைத்த முன்னென்றுமில்லாத சாதனை தமிழ் தேசியவாத அரசியலின் எதிர்காலம் குறித்து கேள்விகளை எழுப்பியது. தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலமாக அரசியல் இணக்கத் தீர்வொன்றை காண்பது தொடர்பில் எதிர்மறையான நிலைப்பாட்டை கடைப்பிடிக்கும் வரலாற்றைக் கொண்ட ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவு தமிழ்க்கட்சிகளை தடுமாற வைத்தது.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான 16 வருடங்களில் தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதில் தமிழ்க்கட்சிகள் நிலவரங்கள் வேண்டிநிற்பதற்கு ஏற்றமுறையில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளை கடைப்பிடிக்கவில்லை என்பதால் அவற்றின் மீது ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவே தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் கணிசமானளவுக்கு திரும்பினார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், கடந்தகால அனுபவங்களில் இருந்து பெறக்கூடியதாக இருக்கின்ற படிப்பினைகளின் அடிப்படையில் எதிர்காலப் பாதையை தீர்மானிக்கும் பக்குவமும் ஆற்றலும் இல்லாத தமிழ்க்கட்சிகள் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற தேர்தலில் கிடைத்த வெற்றியை ஒரு தற்காலிக தடுமாற்றம் என்றே நோக்குகின்றன என்று தெரிகிறது.

வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகளை விடவும் தமிழ் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் மொத்தமாக கிடைத்த வாக்குகள் மிகவும் அதிகமானவை என்பதால் தேர்தல் முடிவுகளை தமிழ்த் தேசியவாதத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கத் தொடங்கியிருப்பதாக வியாக்கியானம் செய்யமுடியாது என்று வாதிட்ட தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். அத்துடன் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படாத காரணத்தினாலேயே தமிழ் மக்கள் தங்களுக்கு ஒரு பாடத்தை புகட்ட விரும்பியதாகவும் அவற்றின் தலைவர்கள் இன்னமும் நினைக்கிறார்கள்.

மற்றைய தமிழ்க்கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதை வழமையாக வெறுத்து வந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூட உள்ளூராட்சி தேர்தல்களுக்காக, சில உதிரிக்கட்சிகளுடன் என்றாலும், புதியதொரு கூட்டணியை அமைத்து பிரசாரங்களை முன்னெடுத்திருக்கிறார். இலங்கை தமிழரசு கட்சி தனியாகவே போட்டியிடுகின்றது. ஆனால், தற்போதைய தேர்தல் முறை காரணமாக உள்ளூராட்சி சபைகளில் நிருவாகத்தை அமைப்பதற்கு மற்றைய தமிழ்க் கட்சிகளின் ஆதரவு அவசியம் என்பதால் அவற்றுக்கு எதிராக பிரசாரம் செய்வதை அது இயன்றவரை தவிர்க்கிறது.



தமிழரசு கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகியவையே வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் களத்தில் நிற்கும் பிரதான அணிகள். இவை சகலதுமே ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு எதிரான பிரசாரத்தை மிகவும் தீவிரமாக முன்னெடுக்கின்ற போதிலும், தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டிய முறை குறித்து வெளிப்படுத்தும் கருத்துக்கள் அவற்றுக்கு இடையிலான கட்சி அரசியல் போட்டியை அம்பலப்படுத்துகின்றன.

ஒவ்வொரு அணியின் அரசியல்வாதிகளும் தங்களுக்கு மாத்திரமே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். தமிழ்த் தேசியவாதத்தின் மீதான பற்றுறுதியை மீண்டும் வெளிக்காட்டுவதற்கான ஒரு தீர்க்கமான சந்தர்ப்பமாக உள்ளூராட்சி தேர்தல்களை பயன்படுத்துமாறு அவர்கள் தமிழ் மக்களிடம் கெஞ்சுகிறார்கள்.


புத்தாண்டில் தமிழ் மக்கள் புதியதொரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கும் தமிழரசு கட்சியின் பதில் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் பாராளுமன்ற தேர்தலில் தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக, தமிழ் மக்களின் அரசியல், கலாசார தேசியவாத உறைவிடமாக கருதப்படுகின்ற யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்று கூறப்படுவது தவறு என்று வாதிடுகிறார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் மகாநாடொன்றில் உரையாற்றிய சுமந்திரன் தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 சதவீதமான வாக்குகளே கிடைத்தன என்றும் மற்றைய அனைத்து தரப்புகளுக்கும் கிடைத்திருக்கின்ற வாக்குகளை ஒவ்வொன்றாக நோக்கும்போது தேசிய மக்கள் சக்திக்கு குறைவான வாக்குகளே கிடைத்தன என்றும் கூறினார். மற்றைய கட்சிகளுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு கூடுதலான வாக்குகள் கிடைத்த காரணத்தால் தமிழ் மக்களின் ஆணை தங்களுக்கே கிடைத்தது என்று ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க உட்பட அதன் தலைவர்கள் உரிமை கோருவது உண்மையா இல்லையா என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக உள்ளூராட்சி தேர்தல்கள் அமைகின்றன என்று குறிப்பிட்டிருக்கும் சுமந்திரன் உள்ளூராட்சி தேர்தல்களில் தங்களுக்கு தெளிவான ஆணையை தருமாறு தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தேசிய மக்கள் சக்திக்கு அல்லது தென்னிலங்கை கட்சிகளுக்கு எமது மக்கள் ஆணையை வழங்கவில்லை. பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்ததை போலன்றி உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் மக்கள் தமிழ்க் கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டும். அவ்வாறு நாம் விடுக்கும் வேண்டுகோளை எந்த தமிழ்க்கட்சிக்கும் வாக்களிக்கலாம் என்று மக்கள் அர்த்தப்படுத்தக் கூடாது. பல தமிழ் கட்சிகளுக்கு வாக்குகளை பிரித்து வழங்கினால் பாராளுமன்ற தேர்தலில் கிடைத்ததைப் போன்ற முடிவுகளே உள்ளூராட்சி தேர்தலிலும் கிடக்கும்.

பிரதான தமிழ்க் கட்சியான தமிழரசு கட்சிக்கு மாத்திரமே வாக்களிப்பதன் மூலமாக தமிழ் மக்கள் தங்களின் ஆணை ஒரு தமிழ்க் கட்சிக்கே இருக்கிறது என்பதை நிரூபிக்க முடியும். தமிழ் மக்களின் ஆணை குறித்து செய்யப்படுகின்ற பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்'' என்று அவர் மேலும் கூறினார்.

சுமந்திரனை போன்றே மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தங்களது கூட்டணிகளுக்கு மாத்திரமே வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் மக்களை கேட்கிறார்கள். அவ்வாறு˙ (22ம் பக்கம் பார்க்க)


ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இந்தியாவின் மூலோபாய மாற்றம்

நான்கு தசாப்த காத்திருப்புக்கு பின்னர் இந்தியா தனது மூலோபாயத்தினை பொருளாதாரத்தை மையப்படுத்தியதாக மாற்றிக் கொண்டிருக்கிறது' என இலங்கையின் மூத்த இராஜதந்திரிகளின் ஒருவரான கலாநிதி தயான் ஜயதிலக கூறியிருக்கிறார்.

அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, இந்தியாவின் இந்த மூலோபாய மாற்றம் வெளிப்பட்டது உண்மை. வழக்கம் போல அவர் தமிழர் பிரச்சினை தொடர்



பாகவோ, அதற்கான தீர்வுகள் தொடர்பாகவோ, பெரிதாக எந்தக் கருத்தையும் வெளியிட்டிருக்கவில்லை. இதற்கு முன்னரான கால கட்டங்களில், இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய தலைவர்களும் சரி, இராஜதந்திரிகளும் சரி இவ்வாறான ஒரு கள்ள மௌனத்தை கடைப்பிடித்ததில்லை. அதே போல, இலங்கையின் தலைவர்கள் புதுடெல்லிக்கு சென்ற தருணங்களிலும் கூட, இனப்பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வு என்பன ஒரு முக்கியமான பேசு பொருளாகவே இருந்து வந்திருக்கிறது. அது பற்றிய கருத்துக்கள், கூட்டறிக்கைகளிலும் இடம் பெறுவது வழக்கம்.

ஆனால், இந்திய பிரதமர் மோடியின் அண்மைய இலங்கை பயணத்தின் போது, அத்தகைய நிலை முற்று முழுதாக மாற்றமடைந்து, பொருளாதாரத்தை மையப்படுத்திய மூலோபாயத்தின் அடிப்படையிலான ஒரு பயணமாக மாறியிருக்கிறது. இந்த மூலோபாய மாற்றத்துக்கு தமிழர்கள் அல்லது தமிழ் தலைமைகள்தான் காரணம் என்ற குற்றச்சாட்டை தயான் ஜயதிலக முன்வைத்திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, மாகாண சபைகளில் பங்கேற்பதற்கு அவர்கள் முன்வரவில்லை என்றும், விடுதலைப் புலிகளுடன் இணைந்து அவர்களின் தனிநாட்டு கோரிக்கையை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தினார்கள் என்றும், அது இந்தியாவை இந்த மூலோபாய மாற்றத்திற்கு இட்டுச் சென்றிருக்கிறது என்றும் கலாநிதி தயான் ஜயதிலக ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டு இந்தியாவின் தீர்வை ஏற்றுக் கொண்டு வடகிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட போது அதில் அமைச்சராகவும் இருந்தவர் தயான் ஜயதிலக. இடதுசாரியான அவர் பின்னர் அந்தப் போக்கில் இருந்து விடுபட்டு, கொழும்பின் பேரினவாத நிகழ்ச்சி நிழலுடன் ஒத்திசைந்து செயற்படக் கூடிய ஒரு இராஜதந்திரியாக மாறி இருந்தார்.

அதனால் தான் அவர் பாரிஸிலும் ஜெனிவாவிலும் தூதுவராக பணியாற்ற வாய்ப்புக் கிடைத்திருந்தது. அவர் இப்பொழுது, இந்தியாவின் மூலோபாய மாற்றத்திற்கு தமிழ் தலைமைகள் மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டு சரியானதா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. தமிழ் தலைமைகள் முற்றிலும் சரியாக செயற்பட்டன என்று வாதிட முடியாது.

அதேவேளை இந்தியாவின் செயற்பாடுகளும் முற்றுமுழுதாக நியாயமானவை என்றும் குறிப்பிட முடியாது. கடந்த காலகட்டத்தில் தமிழர்களுக்கு தீர்வை பெற்று தருகின்றேன் என்ற போர்வையில், இந்தியா செயற்பட்ட விதம் முற்று முழுதாக அதன் நலன் கருதிய ஒரு நடவடிக்கையே தவிர, தமிழர்களின் நலன் கருதிய செயல் அல்ல.

1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக ராஜீவ்காந்தி இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தையும், 2025 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தையும், ஒப்பீடு செய்திருந்த கலாநிதி தயான் ஜயதிலக, முந்தைய பயணத்தை தமிழர் நலன் நோக்கிய பயணம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இரண்டாவது பயணத்தை பொருளாதார நலன்களை நோக்கிய பயணமாக வகைப்படுத்தி இருக்கிறார். ஆனால் இது ஒரு முரண்பாடான கருத்தாகும். ஏனென்றால், 1987ஆம் ஆண்டு இலங்கை தமிழர் பிரச்சினைக்கான தீர்வுகளை வழங்குவது என்ற பெயரில் இந்திய -இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியாவே கையெழுத்திட்டிருந்தாலும், அதற்காக ராஜீவ்காந்தி மேற்கொண்ட பயணம் முற்று முழுதாக தமிழர் நலன் கருதிய ஒன்று அல்ல. அது இந்திய நலனை அதன் பாதுகாப்பு நலனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு பயணம்.

அந்த ஒப்பந்தத்தின் ஊடாக, தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து கையாளப்பட்ட விடயங்களை விட, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்த கையாளப்பட்ட விடயங்களே அதிகம். அதில் ஒன்று, இலங்கையின் துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் இந்தியாவின் நலன்களுக்கு எதிராக பிற நாடுகள் பயன்படுத்துவதை தடை செய்யும் வகையில், இணக்கம் ஏற்படுத்தப்பட்டது.

1980களில் இந்தியாவின் அப்போதைய முக்கியமான கரிசனைகளில் ஒன்றாக திருகோணமலைத் துறைமுகம் இருந்து வந்தது. திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கா தனது தளமாகப் பயன்படுத்தப் போகிறது என்ற அச்சம் இந்தியாவுக்கு இருந்தது. அப்பொழுது அமெரிக்காவுக்கும் சோவியத் ரஷ்யா வுக்கும் இடையிலான பனிப்போரில், ரஷ்யாவின் பக்கம் இந்தியா நின்றது. இந்தியாவும் இலங்கையும் அணிசேரா நாடுகளாக இருந்தாலும் பனிப்போரில் இரண்டுமே வெவ்வேறு நிலைப்பாடுகளை தான் கொண்டிருந்தன. அமெரிக்கா, பிரித்தானியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் பக்கம் இலங்கையின் ஆட்சியாளர்கள் சார்ந்திருந்தார்கள். அதேபோல ரஷ்யாவின் பக்கம் இந்தியா சார்ந்திருந்தது. அந்தச் சூழலில் அமெரிக்க அரசாங்கம் திருகோணமலையை தளமாக பயன்படுத்துவதற்கு ஜே.ஆருடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக இந்தியா கருதியது. அமெரிக்காவிடம் அத்தகைய எண்ணம் இருந்திருக்கவில்லை.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில் இந்தியாவைத் தந்திரமாக கையாளுகின்ற திட்டத்துடனேயே இருந்தது. இந்தியாவை நேரடியாக பகைத்துக் கொள்ளாமல், அதனுடன் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருக்கவே எண்ணியது. இலங்கையை தனது தளமாக்குவதன் மூலம், அந்த மூலோபாயத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்று அமெரிக்க மூலோபாய வல்லுனர்கள் கருதியிருந்தார்கள். அதனால், ஒருபோதும் திருகோணமலை அல்லது வேறு எந்த இடங்களிலும் தனது தளங்களை அமைப்பதற்கு அமெரிக்கா முற்பட்டிருக்கவில்லை.


பிற்காலத்தில் வெளியாகிய அமெரிக்க இராஜதந்திர தகவல் பரிமாற்ற குறிப்புகளில் இதனை தெளிவாக காண முடிந்தது. ஆனால், இந்தியாவுக்கு அமெரிக்கா பற்றிய அச்சம் தொடர்ச்சியாக இருந்து வந்ததால், திருகோணமலையில் அது தளம் ஒன்றை அமைக்க கூடும் என்ற அச்சம் காணப்பட்டது. அதன் அடிப்படையிலேயே, திருகோணமலையில் அமெரிக்கா அல்லது வேறு எந்த ஒரு நாடும் தளம் அமைப்பதை தடுப்பதற்கான வழி என்ன என்று இந்தியா காத்திருந்தது.

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இலங்கை படைகள் தாக்குதலை தொடங்கிய பின்னர் தோன்றிய சூழலை இந்தியா தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ள எண்ணியது.

யாழ்ப்பாணம் முழுமையாக இலங்கைப் படைகளிடம் வீழ்ச்சி அடைந்து விட்டால், ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் உடன்பாடு ஒன்றை எட்டிக் கொள்ள முடியாது என புது டெல்லி கருதியது. அதேவேளை, ஒரு கட்டத்துக்கு மேல் விடுதலைப் புலிகள் மேலாதிக்கம் செலுத்துகின்ற நிலை ஏற்படுவதையும் இந்தியா விரும்பவில்லை. அந்தச் சூழலில் தான், இந்தியா 1987 ஆம் ஆண்டு ஜஜீலை மாதம் இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன் மூலம் திருகோணமலை அல்லது வேறு எந்த துறைமுகம் அல்லது விமான நிலையத்தையோ, பிற நாடுகள் தளமாக பயன்படுத்துவதற்கு முடியாத நிலையை இந்தியா ஏற்படுத்தியது.

ஆனால், அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தமிழர் பிரச்சினைக்


**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**

காகவே இலங்கை அரசாங்கத்துடன் தான ஒப்பந்தம் செய்து கொண்டது போன்ற தோற்றப் பாட்டை காட்டிக் கொண்டது இந்தியா.

அண்மையில் இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. அந்த சந்தர்ப்பத்தில் இது போன்ற ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவது இதுவே முதல் முறை எனக் கூறப்பட்டது. ஆனால், இலங்கையை பிறநாடுகள் தளமாக பயன்படுத்துவதை தடுக்கும் வகையிலான ஒரு பாதுகாப்பு ஒப்பந்தமாகவே, 1987ஆம் ஆண்டு இந்திய–இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதை மறைத்து இந்திய–இலங்கை சமாதான ஒப்பந்தம் என அதற்கு பெயரிடப்பட்டது.

அதனால் தான், அது தமிழர்களின் நலன் கருதிய ராஜீவ் காந்தியின் பயணம் என்றும், இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒப்பந்தம் என்றும் ஒரு மாயத் தோற்றம் உருவாக்கப்பட்டது. அந்தத் தோற்றம் இன்றுவரை நீங்கவில்லை என்பதையே கலாநிதி தயான் ஜயதிலகவின் கருத்து உணர்த்துகிறது.

இந்திய– இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியாவுக்கு பாதுகாப்பு ரீதியான எந்த நலன்களோ விருப்பங்களும் இல்லை என்று யாராலும் கூறமுடியாது. அந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு பாதுகாப்பு ரீதியாக எதிர்பாராத விளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்தியது உண்மை. அதற்குப் பின்னரான காலகட்டத்தில், தரப்புடனான இந்தியாவின் உறவுகளின் இடைவெளி குறையத் தொடங்கியது.

அதற்கு தனியே தமிழ் தலைமைகள் மாத்திரம் காரணம் அல்ல, இந்தியாவின் செயற்பாடுகளும் அதன் நிலைப்பாடுகளும் கூட காரணமாக இருந்தன. இந்தியா தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதும் அதற்குக் காரணம்.

இப்போது, இந்தியா தனது பாதுகாப்பு நலன்களையும் பொருளாதார நலன்களையும் மாத்திரம் மையப்படுத்தி, கொழும்புடனான உறவுகளை பலப்படுத்துவதில் காட்டும் ஈடுபாடு, தமிழர் பிரச்சினையில் இருந்து அது விலகிச் செல்லும் சூழலை உருவாக்கியிருக்கிறது. ஆனால், இந்தியாவில் நீண்ட கால நலன்களை கருத்தில் கொண்டால், இந்த விலகலானது, இந்தியாவுக்கு பாதுகாப்பானதல்ல.

இந்தியாவுக்கு நிலையான பாதுகாப்பை, தமிழர்களால் மட்டுமே ஏற்படுத்த முடியும் என்ற உண்மையை பங்களாதேஷ் நிலவரங்களில் இருந்தாவது இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

# சிங்கள தேசத்தின் மூலஸ்தானத்தில் மோடி நுழைய இந்தியா கொடுத்த விலை ஈழத்தமிழர்களும் 13வது திருத்தமும்

கட்டுரையாளர்
அழகு குணசீலன்

இலங்கையின் சமகால பாரிய நெருக்கடிகள் இரண்டு. ஒன்று முக்கால் நூற்றாண்டுகளாக புரையோடிப் போயிருக்கின்ற இன நெருக்கடி. மற்றையது மூன்று ஆண்டுகளாக மக்கள் எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடி.

இன நெருக்கடிக்கு பயங்கரவாத பிரச்சினை என்றும், பொருளாதார பிரச்சினை என்றும் பெயர் சூட்டி பல தசாப்தங்களாக அரசாங்கம் மேற்கொண்ட யுத்தமும், அதற்கு எதிராக தமிழ் இளைஞர்கள் மேற்கொண்ட எதிர் ஆயுதப் போராட்டமுமே இன்றைய பொருளாதார நெருக்கடியின் மூல காரணமாகும். மற்றையவற்றை துணைக் காரணங்கள் அல்லது பொருளாதார நெருக்கடியை துரிதப் படுத்திய அரசியல், பொருளாதார கொள்கைவகுப்பு சார்ந்த உடனடிக் காரணங்கள் என்று கூறமுடியும்.

இந்த நிலையில் தேசிய சமாதானப் பேரவை அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை சமகாலத்தில் இன நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டிய பொறுப்பை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்திற்கு வலியுறுத்தியுள்ளது. அதில் உள்ள வாசகங்கள் கவனிக்கத்தக்கவை.

இனப்போரும், கடந்த காலத்தைய பாரிய வன்முறைகளும் வெறுமனே குற்றவியல் செயற்பாடுகள் அல்ல. அவை ஒரு பெரிய அரசியல் போராட்டத்தின் ஓர் அங்கமாகும். இந்த பிரச்சனைக்கு தீர்வைக் காண்பதற்கு சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு அப்பால் நீண்ட உறுதிப்பாட்டுக்கு அடித்தளத்தை அமைக்கக்கூடிய பரந்தளவிலான அரசியல் கருத்தொருமிப்பு தேவைப்படுகிறது. உண்மையைக் கண்டறிவதிலும், பொறுப்பு கூற வைப்பதிலும் உள்ள நாட்டம் சகலருக்கும் ஒரே மாதிரியானதாகவும், அரசியல் நோக்கங்கள் இல்லாததாகவும் இருக்க வேண்டும். 37 வருடங்களுக்கு முன்னர் அத்துமீறல்கள் இடம்பெற்ற பட்டலந்தைக்கும், முள்ளிவாய்க்காலுக்கும் ஒரே மாதிரியான நீதி அவசியமாகிறது.

இந்த அறிக்கையில் உள்ள பல வார்த்தைப் பிரயோகங்கள் பிரதமர் மோடிக்கும், ஜனாதிபதி திசாநாயக்கவுக்கும் இடையிலான கைகுலுக்கலுக்கு இந்திய ஊடகங்களையும் விஞ்சி சால்வை போடும் இலங்கை ஊடகங்களுக்கும், பத்தி எழுத்தாளர்களுக்கும் சமர்ப்பணம்.

இந்திய பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்தை அநுரகுமார அரசாங்கம் தனது பொருளாதார தேவைகளுக்கு பயன்படுத்த, மோடி அரசாங்கம் தனது பாதுகாப்பு தேவைகளுக்கு பயன்படுத்தி இருக்கிறது. ஆனால் இந்த நாட்டில் தீர்கப்படாத ஒரு இனநெருக்கடி இருக்கிறது என்பதையும், அதற்கு 13 வது திருத்தத்தின் ஊடாக பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு உண்டு என்பதையும் இரு தலைவர்களும் கண்டும் காணாதவர்களாக, கேட்டும் கேட்காதவர்களாக அரசியல் குறுக்கு ஒழுங்கைக்குள் கைகுலுக்கி இருக்கிறார்கள்.

இதற்கான பொறுப்பை தமிழ்மக்கள் மீது குந்தி இருந்து அரசியல் சவாரி செய்யும் தமிழ்த்தேசிய அரசியலும் ஏற்றுக் கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் மோடியை கிழக்கிற்கு திருகோணமலைக்கு கொண்டு செல்வதில் கூட இவர்களால் சாதிக்க முடியவில்லை.

இது கடந்த பல தசாப்தங்களாக தமிழ்த்தேசிய அரசியல் கடைப் பிடித்த காலாவதியான இராஜதந்திர அணுகுமுறையின் படுதோல்வி. இது தமிழ்த்தேசிய தரப்பை புது டெல்லியில் இருந்து தூர விலக்கி வைத்து இருப்பதுடன், கொழும்பை டெல்லிக்கு மிக நெருக்கமாகவும் கொண்டு வந்துள்ளது. ஆக, பிரதமர் மோடிக்கு சூட்டாமல் ஜனாதிபதி அநுர குமார மித்ர விபூஷண என்ற நட்பின் அடையாளமான கிரீடத்தை யாருக்கு சூட்டமுடியும்?

ஏற்கனவே முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி மவ்மூன் அப்துல்



கயூ ம், பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் ஆகியோருக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது இந்த விருது வழங்கல் ஊடாக இலங்கை இந்தியாவுக்கும் பிராந்தியத்திற்கும் இன்னுமொரு செய்தியை சொல்லி இருக்கிறது. இந்தியாவுடனான சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கத்தை கோடிட்டுக் காட்டியிருக்கிறது. இதை இரு நாடுகளுக்கும் இடையிலான எதிர்கால அரசியலில் குறைத்து மதிப்பிட முடியாது.

SRI LANKA WON'T ALLOW ITS LAND TO BE USED AGAINST INDIA என்ற ஜனாதிபதியின் வாசகத்தை பாராளுமன்றத்தில் மீட்டல் வகுப்பு நடாத்தி ஆமோதித்து இருக்கிறார் சிறிதரன் எம்.பி.

THIS VISIT HAS REAFFIRMED THE DEEP CULTURAL SPIRITUAL AND CIVILISATIONAL TIES BETWEEN OUR TWO NATIONS என்று பேசினார் மோடி.

இங்கு பிரதமர் மோடி கூறியுள்ள கலாச்சார உறவு இந்திய இந்துத்துவாவுக்கும், இலங்கை பௌத்தத்திற்கும் உரியதன்றி வேறென்ன? தமிழ்த்தேசிய அரசியல் தொப்பிள் கொடி அரசியலை ஒரு தலைக்காதலாக பேசிக் கொண்டிருக்க மறுபக்கத்தில் உண்மையான காதலர்கள் ஓடிப்போய் விட்டார்கள்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான குறிப்பிட்ட ஏழு ஒப்பந்தங்கள் தொடர்பாக ஊடகங்கள் நிறையவே பேசிவிட்டன. ஒப்பந்தங்கள் குறித்த உள்ளடக்கம் இல்லாமல் வெறும் வாயை மென்ற கதைகளாகவே இவை இருந்தன. அரசாங்கம் ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை வெளிப்படையாகப் பேச இன்னும் தயாராக இல்லை. அமைச்சர்கள் ஆளுக்கொரு கதையை அளந்து விடுகிறார்கள். இறுதியாக தகவல் அறியும் உரிமையின் கீழ் பாராளுமன்றத்தில் கேட்குமாறு ஒரு பொறி வைக்கப்பட்டுள்ளது.

அந்த கேள்விக்கான பதிலை அரசாங்கம் பையில் வைத்திருக்கிறது. அந்தப்பதில் இப்படி இருக்கும். நாட்டின் தேசிய பாதுகாப்பு நலன் கருதி பாதுகாப்பு ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை முழுமையாக வெளியிட முடியாது என்பதாகும். மேலும் சொன்னால் நீங்கள் அதை வெளிப்படுத்த கோருவது தேசத்துரோகம் என்று சொன்னாலும் ஆச்சரியம் இல்லை.

பிரதமர் மோடியை திருகோணமலைக்கு வருமாறு ஆறு.திருமுகன் டெல்லிக்கு அழைப்பிதழ் கடிதம் அனுப்பினார். இது இரா.சம்பந்தர் மோடிக்கு அனுப்பிய கடிதம் போன்றது தான். அது இன்னும் மோடியின் கைக்கு கிடைக்கவில்லை போலும். ஆனால் அநுர அரசாங்கம் அலுவல்களை திட்டமிட்டு கச்சிதமாக செய்து முடித்திருக்கிறது. அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ கூறிய கட்டியம் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி.

தற்போது கிழக்கு மாகாணத்தை தளமாகக் கொண்ட ஒரு குழு செயற்படுவதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது என்றார் அவர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஸ்டிக்கர் ஒட்டிய ஒரு இளைஞரை, அந்த சட்டத்தை நீக்குவதாக கூறி கதிரையைப் பிடித்த ஜனாதிபதி, தடுத்து வைக்க பாதுகாப்பு அமைச்சராக ஒப்பமிட்டார்.

இவற்றின் மூலம் பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக கூறி மோடி திருகோணமலைக்கு செல்வதை அரசாங்கம் தடுத்து நிறுத்தியது. ஆனால் இந்திய உதவித்திட்டங்களை இன்னோரு கையால் பெற்றுக் கொண்டது. திருகோணமலையின் சிங்களமயமாகும் காட்சிகளை மோடியின் கண்களில் படாமல் தடுப்பது அரசாங்கத்தின் திட்டம்.

இந்து பௌத்த மதங்களுக்கு இடையே பாலம் கட்டுபவர்கள் உண்மையில் செய்திருக்க வேண்டியது என்ன? புத்தசாசன அமைச்சு ஒன்றை அரசாங்கத்தில் நிறுவிக் கொண்டு, சகல மதங்களையும் சரிசமமாக கையாள்வோம் என்பவர்கள் செய்திருக்க வேண்டியது என்ன? வரலாற்று சிறப்பு மிக்க அநுராதபுரம் போன்று, திருக்கோணேஸ்வரத்திற்கும் அழைத்து சென்றிருந்தால், இது விடயத்திலாவது ஒரு சமப்படுத்தலை செய்கிறார்கள் என்று கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும்.


அதைச் செய்யாமல் மோடிக்கு இராமேஸ்வரத்திற்கு வழிகாட்டி விட்டார்கள். இதில் அரசாங்கத்தின் திட்டத்திற்கு வடக்கு கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி மறைமுக ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். திருகோணமலை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அந்த வெளிவிவகார பிரதி அமைச்சரும் மௌன விரதம் பூ ண்டார். யாழ்ப்பாணம், கொழும்பு இந்திய தூதரகங்களில் தேனீருக்கு அடிபிடிப்படும் தமிழ்த்தேசிய எம்.பி.க்கள் இது விடயத்தில் போதிய கால அவகாசத்துடன் திட்டமிட்டு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பாதுகாப்பு புரிந்துணர்வு இணக்கப்பாடு தொடர்பாக மார்ச் 29, 2025 இல் டெல்லியில் ஒரு கசிவு ஏற்படும் வரை பெரிதாக யாரும் அறிந்திருக்கவும் இல்லை, அலட்டிக்கொள்ளவும் இல்லை. விபரங்கள் இன்னும் பாராளுமன்றத்திற்கு தெரியாது. அமைச்சரவைக்கு தெரியாது. ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, விஜய ஹெரத் மற்றும் நளிந்த ஜெயதிஸ்ஸ ஆகியோரே விபரம் தெரியாமல் எல்லாம் தெரிந்தவர்கள் போல் பேசி மழுப்புகிறார்கள். இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கையை வெளியிடுமாறும் – இரத்துச் செய்யுமாறும் வீதியில் வன்முறையில் இறங்கிய ஜனநாயக போராளிகள் இவர்கள் தான்.


துறைமுக முதலீடுகள் மூலம் சீனாவின் இருப்பு இலங்கையில் அதிகரித்து வரும் நிலையில் இந்த முதலீடுகள் இந்தியாவுக்கு விருப்புக் குரியதாக இல்லை. ஏனெனில் இந்த முதலீடுகள் இராணுவ நோக்கில் பயன்படுத்தப்படலாம் என்ற கவலை இந்தியாவுக்கு உண்டு. இந்த முகச் சுழிப்பை புன்சிரிப்பாக்குவதற்கு பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் வழி வகுத்திருக்கிறது.

மித்திரசக்தி மகுடத்தின் கீழ் இந்தியாவும், இலங்கையும் கூட்டு இராணுவ, கடற்படை பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன. பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் கட்டுப்பாடு குறித்து இருக்கின்ற அச்சத்தை இந்தியாவைக் கொண்டு அமெரிக்கா சற்று குறைக்கும். இராணுவ மூலோபாயமாகவும் இது அமைகிறது. அம்பாந்தோட்டை, கொழும்பு துறைமுகங்களில் சீனா கால் பதித்துள்ள நிலையில் இந்தியா காங்கேசன்துறை, திருகோணமலை துறைமுங்களில் கால் பதிக்கிறது. இதற்கு பின்னால் அமெரிக்கா இருக்கிறது. இந்த பனிப்போரில் இலங்கையின் நிலை (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! தடைபட்டு வந்த காரியங்கள் தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.. உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்





ரிஷபராசி அன்பர்களே! வீண் மனகு ழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்யோகத்தில் கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினருடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.





மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். மனம் ஒருநிலைப்படும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமானபோக்கு காணப்பட்டாலும் பணவரத்து குறைவு இருக்காது.தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித் செல்வது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.




கடகராசி அன்பர்களே! மனோதைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.





சிங்கராசி அன்பர்களே! மன குழப்பம் நீங்கும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். பணியாளர்கள் உதவியும் கிடைக்கும்





துலாம்ராசி அன்பர்களே! சுபச் செலவுகள் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! மன நிம்மதி கிடைக்கும். புத்திசாதூர்யம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.








தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப் படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. தன்மையாக பேசுவது நல்லது.




கும்பராசி அன்பர்களே! சுபச் செலவுகள் உண்டாகும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எல்லாவிதமான முன்னேற்றமும் ஏற்படும். பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## சிங்கள தேசத்தின் மூலஸ்தானத்தில்

(21ம் பக்கத் தொடர்ச்சி) ஒரு காலத்தில் ஆப்பிழுத்தி குரங்கின் கதையாகாது என்று எப்படி நம்புவது.

இந்தியா தனது இராணுவ, பொருளாதார நலன் சார்ந்து இராஜதந்திர நகர்வுகளை நகர்த்துகின்ற நிலையில் அதற்கு துணை போவதன் மூலம் வடக்கு கிழக்கின் சுயாதீனத்தை இந்திய இராணுவ நலன்களுக்காக அநுரகுமார அரசாங்கம் அடவு வைத்துள்ளது. இதைப் புரிந்து கொள்ளும் பூகோள அரசியல் அறிவற்ற தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் இந்தியாவுக்காக இலவசமாக சாக இந்து சமுத்திரத்தில் சீனாவுக்கு எதிராக கேடயங்களுடன் நிலையெடுக்க மோடியினதும், அநுரவினதும் கட்டளைக்காக காத்திருக்கிறார்கள்.

இப்போது இந்த தமிழ்த்தேசிய தரகு அரசியல் மோடிக்கு வெறும் செல்லாக்காசு. சிங்கள தேசத்தின் மூலஸ்தானத்தில் அவர் இடம் பிடித்து விட்டார் . இதற்கு இந்தியா கொடுத்த விலை ஈழத்தமிழர்கள். மற்றும் 13 வது திருத்தத்தையும், அதிகாரப் பரவலாக்கத்தையும் கை கழுவியது. ஈழத்தமிழர் அரசியல் அநுரவின் கைகளுக்கு நழுவியிருக்கிறது. இது அநுர அரசாங்கத்திற்கு பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி இனி படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் அனைத்தும் அந்த ஆண்டவனே!

## எதிர்காலத்தை உள்ளூராட்சி தேர்தல்களுக்கு

(19ம் பக்கத் தொடர்ச்சி) வேண்டுகோள விடுக்கும்போது அவர்கள் தமிழ்தேசிய வாதத்தை பாதுகாப்பதில் தங்களுக்கு மாத்திரமே அசைக்க முடியாத பற்றுறுதி இருப்பதாக பிரத்தியேகமாக உரிமை கோருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த கட்சிகளுக்கு உள்ளூராட்சி தேர்தலில் பொது எதிரியாக தேசிய மக்கள் சக்தி விளங்குகின்ற போதிலும், அவற்றினால் ஒரு குறைந்தபட்ச அரசியல் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட முடியாத அளவுக்கு கட்சி அரசியல் போட்டியும் ஆளுமை மோதல்களும் தடையாக இருக்கும் துரதிர்ஷ்டவசமான நிலைவரத்தைக் காண்கிறோம்.

தேசிய மக்கள் சக்திக்கும் தென்னிலங்கையின் மற்றைய பிரதான பழைய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் தமிழர்களின் பிரச்சினைகளைப் பொறுத்தவரை எந்த விதமான வேறுபாடும் கிடையாது என்று தமிழ்க்கட்சிகள் மக்களுக்கு கூறுகின்றன. அதேவேளை, வடக்கு, கிழக்கில் தங்களுக்கு கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களை தந்த மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் தொடர்ந்தும் தக்கவைக்கக்கூடியதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடந்த ஆறுமாத காலச் செயற்பாடுகள் அமையவில்லை என்பது திட்டவட்டமான உண்மை.

தமிழ்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கு செவிமடுத்து தமிழ் மக்கள் உள்ளூராட்சி தேர்தல்களில் வாக்களிப்பார்களா அல்லது அந்த கட்சிகளின் இதுவரையான அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகள் மீது அவர்களுக்கு இருந்துவரும் வெறுப்பு தணியவில்லையா என்பதை மாத்திரமல்ல, தங்களது பிரச்சினைகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடைப்பிடித்துவரும் அணுகுமுறைகளினால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்களா என்பதையும் உள்ளூராட்சி தேர்தல்கள் வெளிக்காட்டும் என்று நம்பலாம்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாக்களிப்பில் எந்தளவுக்கு அக்கறை காட்டுவார்கள் என்ற ஒரு கேள்வியும் எழுகிறது. தமிழ் மக்கள் பாராளுமன்ற தேர்தலில் தமிழ்க்கட்சிகளுக்கு ஒரு பாடத்தை புகட்டுவதற்கு விரும்பினார்கள் என்பதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளும் அவற்றின் தலைவர்கள் எந்தப் பயனையும் தராத தங்களது இதுவரையான அரசியல் பாதையை மாற்றுவதில் அக்கறை காட்டாமல் வெறுமனே கற்பனாவாத தேசியவாத சுலோகங்களையே ஒப்புவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் நியாயபூ ர்வமான தேசிய வாத அரசியல் அபிலாசைகளை ஒரு போதுமே ஏற்றுக் கொள்ளாத ஒரு தேசிய அரசியல் கட்சிக்கு ஆதரவளிப்பதில் இருந்து தமிழ் மக்களை திசைதிருப்புவதற்கு மிகவும் கடுமையாக பாடுபட வேண்டியிருப்பதும் உள்ளூராட்சி தேர்தல்கள் தமிழ்த் தேசியவாதத்தின் இருப்பை உறுதி செய்வதற்கு மிகவும் முக்கியமானவை என்று கூறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதும் உண்மையில் தமிழ் தேசியவாத கட்சிகளின் மிகப் பெரிய ஒரு தோல்வியாகும். அவை தங்களது எதிர்காலத்தை உள்ளூராட்சி தேர்தல்களில் பணயம் வைத்திருக்கின்றன.

**- வீ.தனபாலசிங்கம்**

## NPPக்கு எதிரான தமிழ்த்தேசியக் கட்சிகளின்

(17ம் பக்கத் தொடர்ச்சி) ஆள் பிடித்து தின்னும் அரசியல்தான் இப்பொழுதும் உண்டு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் புதிய கூட்டை ஒரு மாற்றமாக மாற்றுத் தலைமையாக தமிழ் வாக்காளர்கள் பார்க்கிறார்களா இல்லையா என்பது தேர்தல் முடிவுகளில் தெரிய வரும். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. தமிழ் மக்கள் மாற்றத்தைக் கேட்கின்றார்கள். தமிழ்த் தேசிய அரசியலில் புதிய பண்புரு மாற்றத்தைக் கேட்கின்றார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலானது புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக தன்னை புதுப்பித்துக் கொள்ள வேண்டியிரு க்கிறது. கைபேசிச் செயலிகளின் கைதிகளாக உள்ள ஒரு தலைமுறை யினர் மத்தியில் தன்னை ஸ்தாபிக்க வேண்டியிருக்கிறது. அதாவது தமிழ்த்தேசிய அரசியலை தேசத் திரட்சியை புதிய தரிசனங்களோடு முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

## விரைவில் யாழ்ப்பாணத்தில் பாஸ்போர்ட்

(4ம் பக்கத் தொடர்ச்சி) கடவுச்சீட்டு அலுவலகத்தில், ‘ஒருநாள் சேவைக்கான வலைத்தள சேவைக்கு’ கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து போதி யளவு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து, தென்னிலங்கையில் இருந்து குறித்த சேவை வழங்குநர்கள் பெறப்படவுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் மாவட்ட குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கடமையாற்ற தேவையான தமிழ் உத்தியோகத்தர்களை அரச திணைக்களங்களில் இருந்து தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் இருந்து வருகைதந்த விசேட குழுவால் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடக் கற்கையை தமிழ்மொழியில் கற்பிக்க வேண்டும் - ஆறுதிருமுருகன்

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறையை ஆங்கிலமொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம் இது ஆபத்தானது . எமது சுதேசிய மருத்துவப் பாரம்பரியம் பேணிப் பாதுகாப்பதற்காக சித்தமருத்துவ பீட கற்கை நெறி தமிழ்மொழியில் தொடர வேண்டும் இதனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு யாழ் பல்கலைக்கழக சமூகம் உறுதிப் படுத்த வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் பல சான்றோர். பெருமக்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது.

எமது பிரதேசப் பல்கலைக் கழகம் எமது பிரதேச சுதேசிய பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் பெரும் கடமையாகும். எமது சுதேசிய மருத்துவப் பாரம்பரியம் பேணிப் பாதுகாப்பதற்காக யாழ் பல்கலைக் கழக கல்விச் சமூகம் 70 களின் பிற்பகுதியில் எடுத்த முயற்சியின் விளைவாக சித்த மருத்துவத் துறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பேராசிரியர். வித்தியானந்தன் அவர்கள் அயராத முயற்சியால் சித்த மருத்தவ நுல்கள் ஏடுகள் சேகரிக்கப்பட்டு பாரம்பரிய வைத்தியர்களிடம் ஆலோசனை பெற்று பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இத்துறை ஆரம்பிக்கப்பட்டது.

இணுவில் வட்டுக்கோட்டை சில்லாலை ஏழாலை பருத்தித்துறை, அளவெட்டி போன்ற ஊர்களில் இருந்து சித்த வைத்தியர்களின் நுல்கள், உதவிகள் பெறப்பட்டன. பல்கலைக் கழக நூலகர் முருகவேள், பதிவாளர் சிவராஜா போன்ற பெருமக்கள். சித்த மருத்துவத் துறைக்கான வளர்ச்சியில் அருந்துணை செய்துள்ளனர்.

சித்த மருத்துவ பீடம் முற்றுமுழுதாக சுதேசிய வைத்தியப் பாரம் பரியத்தை சிறப்பாக வளர்த்தெடுத்துள்ளார்கள். மேலும் கைதடியிலுள்ள சித்தவைத்திய போதனா வைத்தியசாலையின் வளச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றார்கள் பல நூறு சித்த மருத்துவர்களை தொடர்ந்து உருவாக்கியுள்ளார்கள்.

துறை சார் விரிவுரையாளர்கள் பட்டப்பின் படிப்புகளை மேற்கொண்டு இன்று நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக விளங்குகிறார்கள். சகல கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் தமிழ் மொழி மூலம் சிறப்பாக நடைபெறுகின்றது. நீண்ட காலமாக எடுத்த முயற்சியின் பயனாக சித்த மருத்துவத் துறை தனிப்பீடமாக உயர்வு பெற்றுள்ளது மேலும் சித்தமருத்துவபீடம் விஸ்தரிப்பதற்காக புதிய நிலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் உயர்கல்வி அமைச்சு யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறையை ஆங்கிலமொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம். இது ஆபத்தானது.

இது பாரம்பரிய சித்த மருத்துவத் துறையை அருகிப் போகச் செய்யும் முயற்சியாகும். அகத்தியர் பதிணென் சித்தர்கள் திருமூலர், திருக்குறள், பரராஜசேகரம் போன்ற மூல நுல்களை மொழி பெயர்ப்ப தென்பது



முடியாத விடயம்.

இதை அனைவரும் அறிவர். இந் நிலையில் சித்த மருத்துவத்தை ஆங்கில மொழியில் எவ்வாறு கற்பிக்கப் போகிறார்கள்? இவ் விடயம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மூதவை ,பேரவை மற்றும் தூறைசார்ந்த அறிஞர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

எக்காரணம் கொண்டும் தமிழ் மொழி மூல கற்பித்தலை மாற்றம் செய்யக் கூடாது. இதனைம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவிற்கு யாழ் பல்கலைக்கழக சமூகம் தெளிவு படுத்த வேண்டும் என்றுள்ளது.

இதேவேளை கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் முழுமையான அனுசரணையுடன் வழங்கப்படும் இந்திய அரசின் ஆயுஷ் புலமைப் பரிசில்களுக்கு பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் பட்டப் படிப்பினை தொடர விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகியவற்றில் சித்தி பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். இலங்கை பிரஜைகளுக்கென பிரத்தியேகமாக வழங்கப்படும் இப்புலமைப்பரிசில்கள் 2025-26 கல்வி ஆண்டுக்கானது.

ஆயுர்வேதம், சித்தா, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் முதுகலை படிப்புகளை நாடுபவர்கள், மத்திய இந்திய மருத்துவ கவுன்சிலால் (CCIM) அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

